தினபூமி
thinaboomi.com
புதுச்சேரி, ஞாயிறு, மார்ச் 26, 2023 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00



100 ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய மாற்றம் வரும்: புடினிடம் கூறிய சீன அதிபர்

...2-ம் பக்கம்

ஜனநாயகத்திற்கான எனது போராட்டம் தொடரும்: டெல்லியில் ராகுல் பேட்டி

...3-ம் பக்கம்

கோப்பையை வெல்வது யார்? மகளிர் பிரீமியர் லீக் இறுதியில் டெல்லி-மும்பை இன்று மோதல்

...7-ம் பக்கம்






● மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற விழாவில், மயிலாடுதுறையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு, உச்சநீதிமன்ற நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், எம்.எம்.சுந்தரேஷ், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ராஜா, உயர்நீதிமன்ற நீதிபதி மகாதேவன் ஆகியோர் உள்ளனர்.

### சென்னை, மும்பை, கொல்கத்தாவில்

# சுப்ரீம் கோர்ட் கிளைகள் அமைக்கப்பட வேண்டும் தலைமை நீதிபதியிடம் முதல்வர் நேரில் கோரிக்கை

மதுரை, மார்ச் 26-

சென்னை, மும்பை, கொல்கத்தாவில் சுப்ரீம் கோர்ட் கிளை அமைக்கப்பட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியிடம் முதல்வர் மு.க. ஸ்டாலின் நேரில் கோரிக்கை விடுத்தார்.

மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மற்றும் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு முதல்வர் மு.க .ஸ்டாலின் பேசியதாவது,

இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை மதுரையில் அமைந்திருக்கிறது என்றால், அதற்கு அடித்தளமிட்டவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. 1973-ம் ஆண்டு முதல் முயற்சி செய்து, 2000-ம் ஆண்டு அவரது தலைமையில் அடிக்கல் நாட்டி, தென் மாவட்ட மக்களின் கனவை நனவாக்கினார். இன்று அந்த மாபெரும் கட்டிடம் கம்பீரமாக நிற்கிறது.

நீதி நிருவாகம், சுதந்திரமாகவும், நியாயமாகவும் செயல்படுவதற்கு ஏதுவாகவும், பொதுமக்களுக்கு விரைந்து நீதி வழங்குதலை உறுதி செய்யும் வகையிலும், நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டிட வசதி, மனித ஆற்றல், பிற உட்கட்டமைப்பு வசதிகளை போதுமான அளவில் ஏற்படுத்திக் கொடுப்பது மிக அவசியம் என்பதை உணர்ந்துள்ள தமிழ்நாடு அரசு, அதற்கு முன்னுரிமை அளித்து, செயல்பட்டு வருகிறது.

இந்த அரசு பதவியேற்ற 2021 மே மாதம் முதல், இன்று வரையில், புதிய நீதிமன்றங்களை அமைக்க தேவையான நீதிபதிகள், அலுவலர்கள் பணியிடங்களை உருவாக்கி 106 கோடியே 77 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6 மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள், 12 சார்பு நீதிமன்றங்கள், 7 முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், 14 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், 3 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள், ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றம் மற்றும் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் உள்ளிட்ட 44 புதிய நீதிமன்றங்களை அமைப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3 வணிகச் சட்டங்களுக்கான தனி நீதிமன்றங்கள், மாவட்ட நீதிபதி நிலையில், கோயம்புத்தூர், சேலம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் அமைப்பதற்கும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. கோயம்புத்தூர், காஞ்சிபுரம், திருவாரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பட்டியல் இனத்தவர்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரிக்க 4 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இயங்கி வரும் 160 மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில், 60 நீதிமன்றங்களை ஒரே கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்ய ஏதுவாக, 315 கோடி ரூபாய் செலவில் பல்லடுக்கு மாடிகள் கொண்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடம் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் கட்டிடத்தை அதன் பாரம்பரியம் சிதையாமல் புதுப்பிக்க 23 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

புதியதாக நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுதல், குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுதல், பழைய நீதிமன்ற கட்டிடங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு 297 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வழக்குரைஞர் நல நிதிக்கு அரசு சார்பில் 8 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளதோடு, வழக்குரைஞர்களுக்கான சேமநல நிதி 7 லட்சம் ரூபாயிலிருந்து 10 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

புதியதாக பதிவு செய்யப்பட்ட 1000 இளம் வழக்குரைஞர்களுக்கு, ஊக்கத் தொகையாக 3 ஆயிரம் ரூபாய் மாதம்தோறும் வழங்கிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர் நலநிதியிலிருந்து 4 லட்சம் ரூபாய், இறந்த வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இப்படி பல்வேறு செயல்களை செய்து வருகிறோம்.

எனவே, நீதித்துறையின் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து சிறப்பாக மேற்கொள்ளும் என்று உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளுக்கு மூன்று வேண்டுகோள், நீதித்துறை தன்னிச்சையாக சட்ட நீதியும் சமூக நீதியும் இணைந்து செயல்பட வேண்டும். சென்னை மும்பை கொல்கத்தாவில் சுப்ரீம் கோர்ட் கிளை அமைக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை ஒன்றிய அரசும், சுப்ரீம் கோர்ட்டும் நிறைவேற்றி தர வேண்டும். ஐகோர்ட்டில் தமிழ் மொழி வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட், ஐகோர்ட் நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதி கடைப்பிடிக்க வேண்டும்

எங்களது கோரிக்கைகளை ஒன்றிய அரசும், நீதித் துறையும், உச்ச நீதிமன்றமும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதித் துறையானது சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் இயங்கி ஒவ்வொரு சாமனியனின் இறுதி நம்பிக்கையையும் காப்பாற்றட்டும். நீதித்துறையின் செயல்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும். சட்ட நீதியும், சமூக நீதியும் இணைந்து கிடைக்க நீதித்துறை அமைப்புக்கள் வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

# மாநில மொழிகளில் ஐகோர்ட் தீர்ப்புகள்: சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி விருப்பம்

சென்னை, மார்ச் 26-

ஐகோர்ட் தீர்ப்புகள் அனைத்தும் மாநில மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் விருப்பம் தெரிவித்துள்ளார்.

மதுரையில் ரூ.166 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டிடங்களுக்கு, சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் அடிக்கல் நாட்டினார்; இந்த நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜு, ஐகோர்ட் பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா மற்றும் ஐகோர்ட் நீதிபதிகள் பலர் பங்கேற்றனர்.

மேலும், சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் , பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி மற்றும் பார் கவுன்சில் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்த விழாவில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் பேசியதாவது:

வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு. தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களின் உள்கட்டமைப்பு மிக சிறப்பாக உள்ளது. இந்தியாவில் பல்வேறு நீதிமன்றத்தில் காற்றோட்டம் இல்லாமலும், கழிப்பறை இல்லாமலும் உள்ளது. காணொலி நீதிமன்றம் மூலம் மதுரையிலுள்ள சட்ட கல்லூரி மாணவர்கள் சுப்ரீம் கோர்ட் வழக்குகளை கவனிக்க முடிகிறது.

தமிழக முதல்வர் தரப்பில் 3 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. சுப்ரீம் கோர்ட் ஒட்டுமொத்த நாட்டிற்குமானது. இணையவழி மூலமாக நீதிபதி டெல்லியில் இருக்கும் வழக்கறிஞர்கள் மேலூரிலோ, விருதுநகரிலோ இருந்து வாதிடலாம். நீதிமன்ற செயல்பாடுகளை நேரலை செய்வதன் மூலமாக சட்டக் கல்லூரி மாணவர்களும் கற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும்.

ஐகோர்ட் தீர்ப்புகள் அனைத்தும் மாநில மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். சென்னை ஐகோர்ட் தீர்ப்புகளை தமிழில் வெளியிட ஓய்வுபெற்ற நீதிபதிகள் கொண்ட குழு அமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### ராகுல்காந்தி பதவி பறிக்கப்பட்ட விவகாரம்:

# தண்டனை விதித்த உடனே தகுதிநீக்கம் செய்யும் சட்டப்பிரிவை நீக்க வேண்டும்

## சுப்ரீம் கோர்ட்டில் பொதுநலன் வழக்கு தாக்கல்

புதுடெல்லி, மார்ச் 26-

ராகுல்காந்தி பதவி பறிக்கப்பட்ட விவகாரத்தை அடுத்து தண்டனை விதித்த உடனே தகுதிநீக்கம் செய்யும் சட்டப்பிரிவை நீக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் பொதுநலன் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**எம்.பி. பதவி பறிப்பு...**

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியின் எம்.பி பதவி பறிக்கப்பட்டதை அடுத்து, சமூக ஆர்வலர் ஆபா முரளிதரன் என்பவர் இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கை தொடர்ந்துள்ளார். அவர் தனது மனுவில், ''மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 8 (3)-ன் படி குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு உள்ளாகும் மக்கள் பிரதிநிதிகளின் பதவி, தீர்ப்பு வந்ததும் தானாகவே தகுதி நீக்கம் ஆகிவிடும் என்பது தவறானது.

**அறிவிக்க வேண்டும்...**

எனவே, அவ்வாறு தானாகவே தகுதி நீக்கம் ஆகிவிடும் என்பதை சட்டவிரோதமானது என நீதிமன்றம் அறிவிக்க வேண்டும். தானாகவே பதவி பறிபோய்விடும் என்பது அரசியல் சாசனத்திற்குள் தன்னிச்சையாக, சட்டவிரோதமாக நுழைந்துள்ள வைரஸ் கிருமியைப் போன்றது என அறிவிக்க வேண்டும்'' எனக் கோரப்பட்டுள்ளது. தண்டனை விதித்த உடனே தகுதிநீக்கம் செய்யும் சட்டப்பிரிவை நீக்க வேண்டும்.

**உறுதிப்படுத்த வேண்டும்**

இந்த மனு வழக்கறிஞர் தீபக் பிரகாஷ் மூலம் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஆபா முரளிதரனின் மனுவில், '' அவதூறு வழக்கில் அதிகபட்சம் 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்ட எம்எல்ஏ அல்லது எம்.பி.யின் பதவி பறிக்கப்பட மாட்டாது என இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 499ன் படி உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில், அவதூறு வழக்கில் தகுதி நீக்கம் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பேச்சுரிமையை பாதிக்கிறது'' என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ராகுல்காந்திக்கு எதிராக நாடு தழுவிய பிரசாரம்

## பாரதிய ஜனதா அறிவிப்பு

பாட்னா, மார்ச் 26-

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை இழிவுபடுத்திய ராகுல் காந்திக்கு எதிராக நாடு தழுவிய பிரசாரத்தை பாஜக மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்திக்கு எதிராக தொடரப்பட்ட அவதூறு வழக்கில் அவருக்கு சூரத் நீதிமன்றம் 2 ஆண்டு சிறை தண்டனை விதித்ததை அடுத்து, அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது. இதையடுத்து, டெல்லியில் ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, பிரதமர் மோடி - தொழிலதிபர் அதானி இடையே உள்ள தொடர்பு குறித்து பாராளுமன்றத்தில் தான் கேள்வி எழுப்பியதை சுட்டிக்காட்டினார். இந்த விவகாரத்தில் பிரதமர் மோடியை பாதுகாக்க தனது குரலை ஒடுக்கும் நோக்கில் அரசு செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

ராகுல் காந்தியின் செய்தியாளர் சந்திப்பை அடுத்து, பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ரவிசங்கர் பிரசாத் பாட்னாவில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: ''ராகுல் காந்தியின் எம்.பி பதவி பறிக்கப்பட்டதற்கும் அதானி விவகாரத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. மற்றவர்களைப் பற்றி குறிப்பாக பிற்படுத்தப்பட்ட சமூகத்தைப் பற்றி இழிவாகப் பேசிய ராகுல் காந்தி, அதில் இருந்து கவனத்தை திசை திருப்ப முயல்கிறார். ஒரு குறிப்பிட்ட சமூகத்தை இழிவாகப் பேசிய ராகுல் காந்தி, அதற்கு மன்னிப்பு கேட்க மறுத்ததை அடுத்தே அவருக்கு சூரத் நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

ராகுல் காந்தியின் எம்.பி பதவி பறிக்கப்பட்ட இந்த வழக்கில் இத்தகைய சூழல் உருவாவதைத் தடுக்க காங்கிரஸ் வழக்கறிஞர்கள் ஏன் முயலவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர் பவன் கெரா கைது செய்யப்பட்டபோது அவரை விடுவிப்பதில் காட்டிய ஆர்வத்தை அக்கட்சியின் வழக்கறிஞர்கள் இதில் ஏன் காட்டவில்லை என தெரியவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த முதல் நபர் ராகுல் காந்தி கிடையாது. இதுவரை 32 பேர் இத்தகைய பதவி இழப்பை எதிர்கொண்டு இருக்கிறார்கள். பாஜகவைச் சேர்ந்த 6 பேர் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியை இழந்திருக்கிறார்கள். லாலு பிரசாத் யாதவ் பதவியை இழந்திருக்கிறார். ராகுல் காந்திக்கு எதிராக இன்னமும் 7 அவதூறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

தகுதி நீக்க நடவடிக்கையை அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்த ராகுல் காந்தி முயல்கிறார். தன்னை ஒரு தியாகியாக சித்தரித்துக் கொள்கிறார். விரைவில் நடைபெற உள்ள கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் அரசியல் ஆதாயம் பெறும் நோக்கிலேயே அவர் இவ்வாறு நடந்து கொள்கிறார். பிற்படுத்தப்பட்ட சமூகத்தை இழிவுபடுத்திய ராகுலின் செயலை பாஜக, மக்கள் முன் எடுத்துவைக்கும். பிற்படுத்தப்பட்ட சமூகத்தை அவர் எவ்வாறு வேண்டுமென்றே அவமதித்துள்ளார் என்பதை நாங்கள் அம்பலப்படுத்துவோம். இதற்காக நாடு தழுவிய பிரசாரத்தை பாஜக முன்னெடுக்கும் '' என்று ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார்.

### நாட்டில் தினசரி பாதிப்பு மேலும் உயர்வு:

# கொரோனா பரிசோதனையை மீண்டும் அதிகரிக்க வேண்டும்

## மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

புதுடெல்லி, மார்ச் 26-

நாட்டில் ஒரு நாள் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளதை அடுத்து கொரோனா பரிசோதனையை அதிகப்படுத்த வேண்டும் என்று மாநிலங்களுக்கு மத்திய அரசு மீண்டும் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவில் நேற்று காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 1,590 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. பாதிப்பு கடந்த 3 தினங்களுக்கு முன் 1,300 ஆகவும், நேற்று முன்தினம் 1,249 ஆகவும் இருந்த நிலையில் நேற்று சற்று அதிகரித்துள்ளது. கடந்த அக்டோபர் 30-ந் தேதி நிலவரப்படி பாதிப்பு 1,604-ஆக இருந்தது. அதன்பின்னர் 145 நாட்களில் இல்லாத அளவில் அதிகபட்ச தினசரி பாதிப்பு நேற்றஉ பதிவாகியுள்ளது. தமிழகம், கேரளா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா பரிசோதனையை அதிகப்படுத்த வேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும்

(கடைசி பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் 4 நாட்கள் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, மார்ச் 26-

தமிழகத்தின் 4 நாட்கள் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவல்: தென் இந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டலத்தின் கீழடுக்குகளில் கிழக்கு திசை காற்றும், மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுகிறது.

இதன் காரணமாக, இன்று (மார்ச் 26) தமிழகம் , புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30-40 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 27 மற்றும் 28 ஆம் தேதி தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். 29 ஆம் தேதி தமிழகம், புதுசசேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான / மிதமான மழை பெய்யக்கூடும்.


சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -398.18 | -131.85 |
| பாயின்ட் 57527.1 | பாயின்ட் 16945.05 |



**தங்கம்** 1 சவரன் ₹44,400 · 1 கிராம் ₹5,550



**வெள்ளி** 1 கிலோ ₹76,000 · 1 கிராம் ₹76.00

**டாலர்** ₹82.35

**பெட்ரோல்** ₹102.63 · **டீசல்** ₹94.24

# இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டி பதவியேற்பு

**வாஷிங்டன், மார்ச். 26-**

இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக, லாஸ் ஏஞ்சல்ஸின் முன்னாள் மேயர் எரிக் கார்செட்டி அதிகாரபூர்வமாக பதவியேற்றார்.

கடந்த 2021-ம் ஆண்டு ஜனவரி முதல் இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் பதவி காலியாக உள்ளது. கடைசியாக கென்னத் ஜஸ்டர் என்பவர் தூதராக பணியாற்றினார்.

அதன்பின் அந்த பதவி காலியாக இருந்த நிலையில், இந்த மாத தொடக்கத்தில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக, லாஸ் ஏஞ்சல்ஸின் முன்னாள் மேயர் எரிக் கார்செட்டியை நியமனம் செய்து அதிபர் ஜோபைடன் உத்தரவிட்டார்.



இந்நிலையில், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தலைமையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், எரிக் கார்செட்டி இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக பதவியேற்றுக் கொண்டார். இந்த விழாவில் அவரது மனைவி ஏமி வேக்லேண்ட், தந்தை கில் கார்செட்டி, தாய் சுகே கார்செட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலகிற்கு தனது 3-வது குழந்தையை வரவேற்றார் மெடா நிறுவனர்

**வாஷிங்டன், மார்ச். 26-**

மெடா நிறுவனர் மார்க் ஜூக்கர்பர்க் தனது 3-வது பெண் குழந்தையை வரவேற்றுள்ளார்.

மார்க் ஜூக்கர்பர்க் கடந்த 2012-ம் ஆண்டு பிரிசில்லா சான் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். இந்த நிலையில், மார்க்



ஜூக்கர்பர்க் தம்பதிக்கு சமீபத்தில் மூன்றாவதாக மீண்டும் பெண் குழந்தை பிறந்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை மார்க் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படங்களுடன் பகிர்ந்து குழந்தையை வரவேற்றுள்ளார். அந்த பதிவில், உலகிற்கு வருக அரேலியா சான் ஜூக்கர்பெர்க். நீ எங்களின் சிறிய ஆசீர்வாதம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மார்க் ஜூக்கர்பெர்க் தனது பிறந்த குழந்தையைப் பார்த்து புன்னகைக்கும் புகைப்படமும், பிரிசில்லா சான் குழந்தையை தன் மீது வைத்திருக்கும் புகைப்படமும் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# அனைவரது முயற்சியால் இந்தியா வளர்ந்த நாடாகும்

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

**சிக்கபல்லாபூர், மார்ச். 26-**

இந்தியா வளர்ந்த நாடாக மாறுவதற்கான பாதையில் இருக்கிறது என்றும் அனைவரது முயற்சியின் காரணமாக வளர்ந்த நாடாக மாறும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவின் சிக்கபல்லாபூரில் நடைபெற்ற ஸ்ரீ மதுசூதன் சாய் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தொடக்க விழாவில் பிரதமர் மோடி கலந்துகொண்டு, நிறுவனத்தை தொடங்கிவைத்தார். இதையடுத்து பேசிய அவர், ''நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்து தற்போது அமிர்த மகோத்சவ காலத்தில் உள்ளது. வளர்ச்சி பெற்ற நாடாக உருவெடுக்க வேண்டும் என்பதில் நாடு உறுதியாக உள்ளது.

குறுகிய காலத்தில் நாடு எவ்வாறு வளர்ச்சி பெற்ற நாடாக மாற முடியும் என்று மக்கள் பலரும் கேள்வி கேட்கிறார்கள். நிறைய சவால்கள் இருக்கின்றன. நிறைய பணிகள் மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அப்படி இருக்கும்போது குறுகிய காலத்தில் இந்தியா எவ்வாறு வளர்ந்த நாடாக மாற முடியும் என்பது அவர்களின் கேள்வியாக உள்ளது. இதற்கு எனது பதில், நாட்டு மக்கள் அனைவரின் முயற்சி காரணமாக இது நிகழும் என்பது தான்.=

நாட்டின் சுகாதாரத் துறையில் கடந்த 9 ஆண்டுகளில் பல்வேறு பணிகள் நேர்மையாகவும் திறமையாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மருத்துவக் கல்வியில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கர்நாடகாவில் மட்டும் 9 ஆயிரத்துக்கும் அதிகமான சுகாதார மையங்கள் செயல்பட்டு வருகின்றன'' எனத் தெரிவித்தார்.

# இண்டெல் நிறுவனத்தின் இணை நிறுவனர் ஜார்டன் மூரே காலமானார்

## சுந்தர் பிச்சை உள்ளிட்டோர் இரங்கல்

**நியூயார்க், மார்ச். 26-**

இண்டெல் நிறுவனத்தின் இணை நிறுவனர் ஜார்டன் மூரே தனது 94 வயதில் காலமானார். அவரது மறைவுக்கு சுந்தர் பிச்சை உள்ளிட்டோர் தங்களது டுவிட்டர் பக்கத்தில் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தற்போது புழக்கத்தில் இருக்கும் ஏராளமான கம்ப்யூடிங் சாதனங்கள் உருவாக மூலக் காரணமாக விளங்கியவர்களில் ஜார்டன் மூரே இடம்பெற்று இருந்தார். கடந்த 24-ம் தேதி அமைதியான முறையில் இவரின் உயிர் பிரிந்ததாக இண்டெல் நிறுவன வலைத்தள பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணிக்கும் தருவாயில் ஜார்டன் மூரே அவரின் குடும்பத்தாருடன் ஹவாயில் உள்ள தனது வீட்டில் இருந்துள்ளார். சிலிகான் வேலியில் மதிப்புமிக்க நபர்களில் ஒருவராக ஜார்டன் மூரே இருந்து வந்தார்.

ஜார்டன் மூரே மறைவுக்கு ஆப்பிள் தலைமை செயல் அதிகாரியான டிம் குக் மற்றும் கூகுள் தலைமை செயல் அதிகாரியான சுந்தர் பிச்சை ஆகியோர் இரங்கல் தெரிவிக்கும் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

இவரின் லட்சியம் நம்மை போன்று பலருக்கு தொழில்நுட்ப துறையில் கவனம் செலுத்த தூண்டியது. இவர் எனக்கு தூண்டுகோளாக இருந்துள்ளார். இவரின் பிரிவால் வாடும் குடும்பத்தார் மற்றும் இண்டெல் நிறுவனத்தார் அனைவருக்கும் இரங்கல்கள் என்று சுந்தர் பிச்சை தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

1968 ஜூலை மாத வாக்கில் இண்டெல் நிறுவனத்தை ஜார்டன் மூரே மற்றும் ராபர்ட் நைஸ் இணைந்து துவங்கினர். இருவரும் நீண்டகால நண்பர்கள் ஆவர். மூரே இண்டெல் நிறுவனத்தின் நிர்வாக துணை தலைவராக பணியாற்றி வந்தார். பின் 1979-ம் ஆண்டு இவர் இண்டெல் நிறுவன நிர்வாக குழு தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக பொறுப்பேற்றார்.

# குழந்தைகளின் ஆபாச வீடியோக்களை பகிர்ந்த இந்தியருக்கு 15 ஆண்டு சிறை

**வாஷிங்டன், மார்ச். 26-**

குழந்தைகளின் ஆபாச வீடியோக்களை பகிர்ந்ததற்காக இந்தியருக்கு 15 வருடம் 8 மாதம் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பு அளித்துள்ளது.

அமெரிக்காவில் சுற்றுலா நிறுவனத்துக்கு சொந்தமான சொகுசு கப்பலில் இந்தியாவை சேர்ந்த ஏஞ்சலோ விக்டர் பெர்னாண்டஸ் என்பவர் வேலை பார்த்து வந்தார். இவர் கடந்த ஆண்டு சொகுசு கப்பலில் பயணித்த ஒரு பயணிக்கு செல்போனில் குழந்தைகளின் ஆபாச வீடியோக்களை பகிர்ந்ததாக கூறப்படுகிறது.

மேலும் அந்த பயணியிடம் குழந்தைகளுடன் பாலியல் உறவு வைத்து கொள்ள தான் ஏற்பாடு செய்வதாகவும் விக்டர் கூறியுள்ளார். இது தொடர்பான புகாரில் விக்டர் மற்றும் அந்த பயணி கைது செய்யப்பட்டு அமெரிக்காவின் கோர்ட்டில் விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையில் இதன் தீர்ப்பு வெளியானது. குழந்தைகளின் ஆபாச வீடியோக்களை பகிர்ந்ததற்காக விக்டருக்கு 15 வருடம் 8 மாதம் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பு அளித்துள்ளது.

# தமிழ்நாட்டிற்கு என்.எல்.சி. நிறுவனம் தேவையில்லை

## அன்புமணி ராமதாஸ் பேட்டி

**கடலூர், மார்ச். 26-**

என்.எல்.சி. நிறுவனம் தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதே எங்களுடைய கோரிக்கை என்று அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

கடலூரில் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக அரசு இனி என்.எல்.சி.க்காக நிலம் கையகப்படுத்தக் கூடாது. தொடர்ந்து என்.எல்.சி. நிறுவனம் கடலூர் மாவட்டத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்த பாதிப்புகள் கடந்த 66 ஆண்டுகளாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் ஒரு காலத்தில் 8 அடியில் இருந்த நிலத்தடி நீர், என்.எல்.சி.யால் தற்போது ஆயிரம் அடிக்குச் சென்று விட்டது. 66 ஆண்டு காலமாக இந்த பழுப்பு நிலக்கரியை எரித்து, மின்சாரம் தயாரித்து கொண்டிருக்கிற என்.எல்.சி. வெளிவிடும் நச்சுவாயுக்களால் 100 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள மக்கள் சுவாச பாதிப்பு, நுரையீரல் பாதிப்பு, ரத்த கொதிப்பு உள்ளிட்டவற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

என்.எல்.சி. நிறுவனத்துக்காக நிலம் கொடுத்தவர்களுக்கு தற்போது வரை வேலை வழங்கப்படவில்லை. இழப்பீடும் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு கால கட்டத்திலும் பல போராட்டங்கள் நடத்தியும் எந்த பலனும் இல்லை.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே எங்களுடைய கோரிக்கை என்.எல்.சி. நிறுவனம் தமிழ்நாட்டிற்கு தேவையில்லை. என்.எல்.சி.யால் தமிழ்நாட்டிற்கு 800 முதல் 1000 மெகாவாட் மின்சாரம் மட்டுமே கிடைக்கின்றது.

தமிழ்நாட்டுக்கு ஒருநாளுக்கு தேவைப்படும் மின்சாரம் 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மெகாவாட். அதில் மிகக்குறைந்த அளவில் தான் என்.எல்.சி. நிறுவனம் கொடுக்கிறது. நாம் வேறு வகையிலே இந்த மின்சாரத்தை பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# 100 ஆண்டுகளில் இல்லாத மாற்றம் வரும்: புடினிடம் கூறிய சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் வீடியோ வைரல்

**மாஸ்கோ, மார்ச். 26-**

100 ஆண்டுகளில் இல்லாத மாற்றம் வரும் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங், புடினிடம் கூறிய வீடியோ வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

சீன அதிபர் ஜி ஜின்பிங், 3 நாட்கள் பயணமாக ரஷ்யா சென்றிருந்தார். இந்த சந்திப்பில் இரு நாடுகளின் பரஸ்பர உறவுகள் குறித்து இரு நாட்டுதலைவர்களும்ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையில் உக்ரைன் உடனான ரஷ்யாவின் போர் விவகாரம் முக்கியத்துவம் பெற்றது. இரு நாட்டு வணிக உறவு குறித்தும் ஆலோசனை நடத்தினர். மேலும் சந்திப்பு குறித்து புடின் கூறும் போது,

சீனா உக்ரைனுடனான போரை முடிவுக்கு கொண்டு வரத்தான் முயற்சி செய்கிறது. இவ்விவகாரத்தில் வரலாற்றின் சரியான பக்கத்தில் சீனா இருக்கிறது. ரஷ்யாவின் முக்கிய வர்த்தக நாடாக சீனா உள்ளது என்று பேசினார்.

இந்த நிலையில் ரஷ்ய பயணத்தின் முடிவில் சீன அதிபர் ஜி ஜின்பிங், புடினுடன் கூறிய வார்த்தைகள் இணையத்தில் வைரலாகி வருகின்றது. அந்த வீடியோவில், அதிபர் மாளிகை வாயிலில் நின்று கொண்டிருக்கும் ஜி ஜின்பிங் புடினின் கைகளைப் பிடித்து , 100 ஆண்டுகளில் இல்லாத மாற்றம் வரும். இந்த மாற்றத்தை நாம் இணைந்து செய்ய இருக்கிறோம் என்று கூறுகிறார்.

அதற்கு புடின், நான் இதனை ஏற்றுக் கொள்கிறேன். உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் நண்பரே. உங்கள் பயணம் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று பதிலளிக்கிறார்.

இதற்கிடையே ஜி ஜின்பிங் இதன் மூலம் அமெரிக்காவுக்கும், பிற உலக நாடுகளுக்கும் மறைமுகமான செய்தியை வழங்கி இருக்கிறார் என்று பல அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

**26-03-2023**




**மேஷம்:-** இன்று உங்களுக்கு சுமாரான நாள். எதிர்பார்த்த இனங்களில் பணவரவு தாமதப்படும். சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதையும் சாதிக்கும் திறமை பெறுவீர்கள்.

**ரிஷபம்:-** தனவரவு தாராளமாக இருக்கும். புத்தி சாதுர்யம் மற்றும் வாக்குவன்மையால் பொருளாதார நிலை மேம்படும். ஆரோக்கியம் மேம்படும். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும்..

**மிதுனம்:-** தொழில் புரிவோருக்கு வீண் செலவுகள், பணமுடையும் தவிர்க்க முடியாதது. உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர்வழியில் பணம் செலவு செய்தால் நிம்மதி பிறக்கும்.

**கடகம்:-** தொழில் மற்றும் வியாபாரம் சம்பந்தமாக பெரியவர்கள் சந்திப்பு இனிதாக அமையும். எண்ணியபடி எண்ணிய காரியங்கள் நிறைவேறும். பெண்களால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:-** மனதில் தைரியமும், புதிய தகவல்கள் மூலம் உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி தரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். புதிய உத்தியோக வாய்ப்புகள் ஏற்படும்.

**கன்னி:-** இரவும் பகலும் போல் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். தெய்வ நம்பிக்கையால் தேகத்தில் புது தெம்பு ஏற்படும். உல்லாசப் பயணங்கள் உற்சாகம் தரும்.

**துலாம்:-** எந்த விஷயத்தில் நேர்மையாக நடப்பது நல்லது.. அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மனைவியின் கலகத்தால், மற்றவர்கள் பகை ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**விருச்சிகம்:-** பணவரவால் மனம் பரவசப்படும் நாள். ஆடை ஆபரணங்கள், அலங்காரப் பொருட்கள் சேரும். காதல் ஈடுபாட்டால் கவலைகளை மறந்து களிப்படைவீர்கள். அரசாங்க உதவிகள் தடையின்றி கிடைக்கும்.

**தனுசு:-** தன வரவு கூடும். எதிரிகள் பணிவர். எதிர்ப்புகள் குறையும். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும். பெயரும் புகழும் ஓங்கும். புதிய பெண் சிநேகம் புத்துணர்வு தரும்.

**மகரம்:-** பயணங்களில் கவனம் தேவை. குழந்தைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் உங்கள் திறமை பாராட்டுப் பெறாது.

**கும்பம்:-** தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் தேவை. தடைபடும் காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினையாக்கும் என முன்னேற முயலுங்கள் வெற்றி உங்கள் பக்கம்.

**மீனம்:-** மனைவியின் ஒத்துழைப்பால் ஏற்படும் மகிழ்ச்சி, மன தெம்பையும் அதிகரிக்கும். தனலாபம் பெருக, புதிய ஆடை ஆபரணங்கள் வாங்கும் பாக்கியம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் வெற்றிகளை குவிப்பர்.

# ஆன்லைன் ரம்மியால் திருச்சியில் ஊழியர் ஒருவர் தற்கொலை

**திருச்சி, மார்ச். 26-**

திருச்சி மாவட்டம் திருவெறும்பூரில் ஆன்லைன் ரம்மியால் பணத்தை இழந்த துப்பாக்கி தொழிற்சாலை மருத்துவமனை ஊழியர் தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

திருவெறும்பூர் அருகே உள்ள துப்பாக்கி தொழிற்சாலை பகுதியில் ரவிசங்கர் வசித்து வந்தார். இவர் துப்பாக்கி தொழிற்சாலை மருத்துவமனையில் பணியாற்றி வந்துள்ளார். இவர் ரவிசங்கர் ஆன்லைன் ரம்மி விளையாட்டை தொடர்ந்து விளையாடி அந்த விளையாட்டுக்கு அடிமையாகியும் உள்ளார். ரவிசங்கர் தொடர்ந்து ஆன்லைன் ரம்மி விளையாடியதில் பெருமளவு பணத்தை இழந்துள்ளார்.

இதனால் நேற்று முன்தினம் இரவு வீட்டில் அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். ரவிசங்கர் மனைவி ராஜலட்சுமி காலை அவரை எழுப்பிய போது எழவில்லை என கூறப்படுகிறது.

இதை தொடர்ந்து உடனடியாக ரவிசங்கரை மீட்டு துப்பாக்கி தொழிற்சாலை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு ரவிசங்கரை பரிசோதித்த மருத்துவர்கள் ரவிசங்கர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறியுள்ளனர். இதனை கேட்ட ரவிசங்கரின் மனைவி அதிர்ச்சியடைந்தார். மேலும் இந்த சம்பவம் குறித்து ராஜலட்சுமி நவல்பட்டு காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

ஆன்லைன் ரம்மிக்கு அடிமையாகி ரவிசங்கர் தற்கொலை செய்து கொண்டதால் அவரின் குடும்பத்தினர் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். ஏற்கனவே ஆன்லைன் ரம்மியால் 41 பேர் தற்கொலை செய்துள்ள நிலையில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் பரவும் பறவைக் காய்ச்சல்: 3.30 லட்சம் கோழிகளை அழிக்க முடிவு

**டோக்கியோ, மார்ச். 26-**

ஜப்பானில் பரவி வரும் பறவை காய்ச்சலை தொடர்ந்து 3.30 லட்சம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

ஜப்பான் நாட்டின் அமோரி மாகாணத்தில் பல கோழிப்பண்ணைகள் உள்ளன. அதில் ஒரு பண்ணையில் இருந்த கோழிகளுக்கு பறவைக் காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டது. இதனையடுத்து அந்த பண்ணை மற்றும் அதிலுள்ள உபகரணங்கள் கிருமி நீக்கம் செய்யப்பட்டன.

மேலும் அதனை சுற்றிலும் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் உள்ள பகுதிகளில் கோழிகள் மற்றும் முட்டைகளை கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. இந்த பறவைக் காய்ச்சல் அதிவேகமாக பரவி வருவதால் நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள கோழிகளை பாதுகாப்பதற்காக இந்த பண்ணையில் சுமார் 3 லட்சத்து 30 ஆயிரம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர்.

ஜப்பானில் கடந்த சில மாதங்களாக பறவைக் காய்ச்சல் தீவிரமடைந்து வருவதும், இதன் காரணமாக லட்சக்கணக்கான கோழிகள் கொல்லப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# ராகுல் தகுதி நீக்கம்: மாநிலம் முழுவதும் நாளை முதல் போராட்டம் நடத்த காங். திட்டம்: கே.எஸ்.அழகிரி

**சென்னை, மார்ச். 26-**

ராகுலின் தகுதி நீக்கத்தை தொடர்ந்து மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து நாளை முதல் காங்கிரஸ் சார்பில் மாநிலம் முழுவதும் போராட்டங்கள், பேரணிகள் நடத்த திட்டமிட்டுள்ளதாக தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்தார்.

ராகுல் காந்தி எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டது காங்கிரஸ் கட்சிக்குள் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. அடுத்த கட்டமாக காங்கிரஸ் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அகில இந்திய காங்கிரஸ் அமைப்பு செயலாளர் கே.சி. வேணுகோபால் அனைத்து மாநில காங்கிரஸ் தலைவர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரியும் கலந்து கொண்டார். இந்த ஆலோசனையின் போது பரிமாறப்பட்ட கருத்துக்கள் பற்றி அவர் கூறியதாவது:-

மோடி அரசு பழிவாங்கும் எண்ணத்துடன் நடந்திருப்பது தெளிவாகி இருக்கிறது. இந்த பிரச்சினையை அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் அணுக முடிவு செய்துள்ளோம். வருகிற 27-ம் தேதி முதல் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மிகப்பெரிய கூட்டங்கள், போராட்டங்கள், பேரணிகள் நடத்த திட்டமிட்டுள்ளோம். இது பற்றிய திட்டங்களை அகில இந்திய தலைமை வகுத்து அறிவிக்கும்.

இந்த கூட்டங்கள், போராட்டங்கள் வாயிலாக பா.ஜ.க. அரசு எதிர்கட்சிகளை எப்படியெல்லாம் நசுக்குகிறது என்பதை மக்கள் மத்தியில் தெளிவு படுத்துவோம். உலக அளவில் பல சர்வாதிகாரிகள் பின்பற்றியது போல் பிரதமர் மோடியும் சர்வாதிகார போக்கை கடைபிடிப்பதை விளக்குவோம். மோடியின் இந்த சர்வாதிகார போக்கும், நடவடிக்கையும் காங்கிரசுக்கு மட்டுமல்ல ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து கட்சிகளுக்கும் ஆபத்து என்பதையும் மக்கள் மன்றத்தில் கொண்டு செல்வோம்.

மற்றொரு பக்கம் நீதிமன்றத்திலும் சட்டப் போராட்டம் நடத்தி நீதியை நிலைநாட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். 2024 தேர்தலில் சர்வாதிகாரத்தின் பிடியில் இருந்து இந்தியாவை மீட்டு ஜனநாயகத்தை தழைக்க வைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# சாக்லேட் தொழிற்சாலையில் வெடி விபத்து: 2 பேர் பலி

**வாஷிங்டன், மார்ச். 26-**

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணம் ரீடிங் பாரோ பகுதியில் சாக்லேட் தயாரிப்பு தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணம் மேற்கு ரீடிங் பாரோ பகுதியில் சாக்லேட் தயாரிப்பு தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்தில் சாக்லேட் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் சிக்கிக் கொண்டனர்.

இந்த வெடிவிபத்து குறித்து தகவலறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஆனாலும், இந்த சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 9 பேர் மாயமாகினர்.

மாயமான 9 பேரை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. வெடிவிபத்தால் தொழிற்சாலை நிலைகுலைந்ததால் மாயமானோர் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்புப்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

### மெட்ரோ ரயில் நிலையங்களில்
# ஏப்.19-ம் தேதி முதல் வாகனங்களை நிறுத்த பயண அட்டை கட்டாயம்

**சென்னை, மார்ச் 26-**

மெட்ரோ ரயில் நிலையங்களில் பயண அட்டை இருந்தால் மட்டுமே வாகனங்களை நிறுத்த அனுமதி என மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்த நடைமுறை ஏப். 19 முதல் அமலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு மெட்ரோ ரயில் பயண அட்டை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளது.

இந்த நடைமுறையானது மிகவும் திறமையான, வசதியான மற்றும் பாதுகாப்பான கட்டண முறைகளைக் காக்கவும், பணப்புழக்கத்தை குறைக்க வேண்டிய தேவைகளுக்காகவும் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயணிகள் வாகன நிறுத்தும் இடங்களில் வேகமாக நுழையவும், வெளியேறவும், பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மை, பணமில்லா பரிவர்த்தனைகள் போன்ற நன்மைகள் கிடைக்கும். பயணிகள் மெட்ரோ ரயில் பயண அட்டையை அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்டர்களிலும், வாகன நிறுத்தும் இடத்திலும் பெற்றுக் கொள்ளலாம். வாகன நிறுத்தும் இடத்துக்கான அனுமதி பயண அட்டைகளுடன் மட்டுமே இந்த பயண அட்டை கிடைக்கும்.

இந்த நடைமுறை அடுத்த மாதம் (ஏப்ரல்) 19-ம் தேதி அமலுக்கு வர உள்ளது. எனவே அனைத்து பயணிகளும் மெட்ரோ ரயில் பயண அட்டைகளை விரைவாக பெற சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

# போதைப்பொருள் ஒழிப்பில் அனைவரும் கைகோர்த்திடுவோம்
### டுவிட்டரில் முதல்வர் ஸ்டாலின் தகவல்

**சென்னை, மார்ச். 26-**

போதைப்பொருள் ஒழிப்பில் அனைவரும் கைகோர்த்திடுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது, போதைப்பொருட்கள் ஒழிப்பில் அரசின் நடவடிக்கைகளுடன் விழிப்புணர்வுக்கான பரப்புரைகளை செய்ய வலியுறுத்தி வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் போதைப்பொருள் தொடர்பான காவல்துறையின் குறும்படங்களால் இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த முடியும் என சென்னை காவல்துறையின் விழிப்புணர்வு குறும்படத்தை சுட்டிக்காட்டி டுவிட்டரில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

### பெங்களூருவில்
# மெட்ரோ ரயில் சேவையை துவக்கி வைத்தார் பிரதமர்



**பெங்களூரு, மார்ச் 26-**

பெங்களூருவில் மெட்ரோ ரெயில் சேவையை தொடங்கி வைத்து ஊழியர்களுடன் கலந்துரையாடினார் பிரதமர் மோடி.

பிரதமர் மோடி நேற்று கர்நாடகத்திற்கு வருகை தந்தார். தனி விமானம் மூலம் பெங்களூரு வந்த அவர், எச்.ஏ.எல். விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் சிக்பள்ளாப்பூருக்கு சென்றார்.

அங்கு மதுசூதன் சாய் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரியை கர்நாடக முதல்-மந்திரி பசவராஜ் பொம்மை முன்னிலையில் பிரதமர் மோடி திறந்து வைத்தார். பிறகு பெங்களூரு வந்த பிரதமர் மோடி கே.ஆர்.புரம்-ஒயிட் ஃபீல்டு இடையே சுமார் 13 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரெயில் சேவையை தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து டிக்கெட் பெற்றுக்கொண்டு பிரதமர் மோடி மெட்ரோ ரெயிலில் பயணம் செய்து மகிழ்ந்தார். மேலும் மெட்ரோ ரெயில் நிலைய ஊழியர்களுடன் கலந்துரையாடியபடி பிரதமர் மோடி பயணம் செய்தார்.

# தொன்மை வாய்ந்த தமிழ் மொழி, விரைவில் சுப்ரீம்கோர்ட்டில் பயன்பாட்டிற்கு வரும்
### மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ பேச்சு

**மதுரை, மார்ச். 26-**



தொன்மை வாய்ந்த மொழியான தமிழ், விரைவில் சுப்ரீம் கோர்ட்டில் பயன்பாட்டிற்கு வரும் என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ தெரிவித்தார்.

மதுரையில் ரூ.166 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டிடங்களுக்கு, சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில் மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ பேசியதாவது,

இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு நீதித்துறை கட்டமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கொரோனா காலத்தில் சென்னை ஐகோர்ட் மற்றும் தமிழ்நாட்டின் அனைத்து நீதிமன்றங்களும் சிறப்பாக செயல்பட்டு நீதியை வழங்கியுள்ளன. காவல்துறையினர் பொதுமக்களிடம் மென்மையான போக்கினை கடைப்பிடிக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு நீதித்துறை உள்கட்டமைப்புக்கு ரூ. 9,000 கோடி வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நீதித்துறைக்கு வழங்கும் நிதியை முழுமையாக பயன்படுத்த வேண்டும். இ- கோர்ட் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

வருங்காலத்தில் நீதிமன்றங்களில் காகிதம் இல்லாமல் டிஜிட்டல் முறையில் பணிகள் நடைபெறும். இ - கோர்ட் திட்டத்திற்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ரூ.7,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற நாடுகளில் ஒரு நாளைக்கு 7 வழக்குகளை மட்டுமே விசாரணைக்கு எடுக்கின்றனர்.

மற்ற நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில் நாள் ஒன்றுக்கு 60 வழக்குகளுக்கு மேல் விசாரணை நடைபெறுகிறது.

தொழில்நுட்ப வசதிகள் வழக்குகளை விரைவாக முடிக்க உதவும். பழமை மற்றும் தொன்மை வாய்ந்த மொழியான தமிழ், விரைவில் சுப்ரீம் கோர்ட்டில் பயன்பாட்டிற்கு வரும். தமிழ்நாட்டில் ஐகோர்ட் உள்பட அனைத்து நீதிமன்றங்களிலும் தமிழ் மொழி பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழகத்தில் நீதியின் வழியில் ஆட்சி நடத்தி வருகிறார் முதல்வர் ஸ்டாலின்
### அமைச்சர் ரகுபதி பெருமித பேச்சு

**மதுரை, மார்ச். 26-**

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நீதியின் வழியிலான ஆட்சியை தமிழகத்தில் நடத்தி வருகிறார் என்று அமைச்சர் ரகுபதி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

மதுரை மாவட்ட கோர்ட்டுக்கு ரூ. 166 கோடியில் கூடுதல் கட்டிடங்கள் கட்டப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் மயிலாடுதுறை மாவட்ட கோர்ட்டு-செசன்சு கோர்ட்டு தொடக்க விழா மதுரை மாவட்ட கோர்ட்டு வளாகத்தில் நேற்று நடந்தது. இந்த விழாவில் தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பேசியதாவது:-

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நீதியின் வழியிலான ஆட்சியை தமிழகத்தில் நடத்தி வருகிறார். சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் தனிநபர் சுதந்திரம் தொடர்பாக பல்வேறு சிறப்பு வாய்ந்த தீர்ப்புகளை வழங்கி உள்ளார்.

நீட் வழக்கில் மாணவர்களின் கருத்து முக்கியம் எனவும், மாநில அரசின் நிலைப்பாட்டையும் பார்க்க வேண்டும் என்ற அவரது கருத்து நம்பிக்கை அளிக்கிறது. அவரது நம்பிக்கை வார்த்தைகள், நீதித்துறை மீதான பொது மக்களின் நம்பிக்கையை மென்மேலும் வலுப்படுத்தும். இவ்வாறு அவர் பேசினார்.

# சபரிமலை கோவில் நடை இன்று திறப்பு
### முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே அனுமதி

**சபரிமலை, மார்ச் 26-**

சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா 10 நாட்கள் விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டுக்கான திருவிழா வருகிற 27-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதனை முன்னிட்டு சபரிமலை ஐயப்பன் கோவில் நடை இன்று (26-ந் தேதி) மாலை 5 மணிக்கு திறக்கப்படுகிறது. இருப்பினும் இன்று வேறு பூஜைகள் எதுவும் நடை பெறாது. நாளை (27-ந் தேதி) காலை தந்திரி கண்டரரு ராஜீவரரு முன்னிலையில் பங்குனி உத்திர திருவிழாவுக்கான கொடி ஏற்றப்படுகிறது. தொடர்ந்து தினமும் சிறப்பு பூஜைகள் நடைபெறும். ஆன்லைனில் முன் பதிவு செய்த பக்தர்கள் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. விழாவின் இறுதி நாளான ஏப்ரல் 5-ந் தேதி பம்பையில் ஆராட்டு விழா நடைபெறும். அன்று மாலை கொடியிறக்கப்பட்டு 10 நாள் திருவிழா நிறைவடைகிறது.

# ஜனநாயகத்திற்கான எனது போராட்டமும் தொடரும்
### டெல்லியில் ராகுல் காந்தி பேட்டி

**புதுடெல்லி, மார்ச் 26-**

அரசுக்கு எதிரான தனது கேள்விகளும், ஜனநாயகத்திற்கான தனது போராட்டமும் தொடரும் என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் சூரத் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து, அவர் எம்.பி.பதவியை இழந்துவிட்டதாக மக்களவை செயலர் (மார்ச் 24) அறிவிக்கை ஒன்றை வெளியிட்டார். இந்நிலையில், பதவி இழப்புக்குப் பிறகு முதன் முறையாக ராகுல் காந்தி டெல்லியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: ''நாட்டில் ஜனநாயகம் தாக்கப்படுவதாக நான் ஏற்கனவே பலமுறை கூறி இருக்கிறேன். இதற்கான உதாரணங்களை நாம் ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

பிரதமர் நரேந்திர மோடிக்கும் தொழில் அதிபர் கவுதம் அதானிக்கும் உள்ள தொடர்பு குறித்து பாராளுமன்றத்தில் நான் கேள்வி எழுப்பினேன். அதன்பிறகு நான் பாராளுமன்றத்தில் பேச வாய்ப்பு அளிக்கப்படவே இல்லை. நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற வெளிநாட்டு சக்திகளின் உதவியை நான் கோருவதாக என் மீது சில அமைச்சர்களே குற்றம் சாட்டினார்கள். உண்மையில் அதுபோன்ற எந்த செயலிலும் நான் ஈடுபடவில்லை. இது குறித்து பாராளுமன்றத்தில் விளக்கம் அளிக்க வாய்ப்பு வழங்குமாறு மக்களவை சபாநாயகருக்கு நான் கடிதம் எழுதினேன். ஆனால், எனக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

இதுபோன்ற நடவடிக்கைகள் என்னை தடுத்து நிறுத்தாது. கேள்வி கேட்பதை நான் நிறுத்தமாட்டேன். பிரதமர் மோடிக்கும் அதானிக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து நான் தொடர்ந்து கேள்வி எழுப்புவேன். நாட்டின் ஜனநாயகத்திற்கான எனது போராட்டமும் தொடரும்.

அதானியின் மறைமுக நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட ரூ. 20 ஆயிரம் கோடி யாருடைய பணம் என்ற எளிய கேள்வியைத் தான் நான் கேட்டேன். இந்த விவகாரத்தில் பிரதமரை பாதுகாப்பதற்காக எனக்கு எதிராக திட்டமிட்ட ரீதியில் நடத்தப்பட்ட நாடகம்தான் இது. அச்சுறுத்தல், பதவிநீக்கம், கைது நடவடிக்கை போன்றவற்றுக்கு நான் அஞ்சமாட்டேன். உண்மையைத் தவிர வேறு எதன் மீதும் எனக்கு விருப்பம் இல்லை. நான் உண்மையை மட்டுமே பேசுகிறேன். இது எனது கடமை. எனது பதவி பறிக்கப்பட்டாலும், நான் கைது செய்யப்பட்டாலும் தொடர்ந்து உண்மையை பேசுவேன். இந்த நாடு எனக்கு எல்லாம் கொடுத்தது. அதனால்தான் நான் இதை செய்கிறேன்.

அதானி குறித்த எனது உரை பிரதமருக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. அதனை நான் அவரது கண்களில் பார்த்தேன். அதன் காரணமாகவே முதலில் திசை திருப்பல்களை செய்தார்கள். அடுத்ததாக தகுதிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறேன். நான் நிரந்தரமாகவே தகுதிநீக்கப்பட்டாலும் நான் எனது வேலையை தொடர்ந்து செய்வேன். நான் பாராளுமன்றத்திற்குள் பேசுகிறேனா அல்லது வெளியே பேசுகிறேனா என்பது அல்ல முக்கியம். நாட்டுக்காக தொடர்ந்து போராடுவேன்.

நாட்டின் ஜனநாயக அமைப்பை பாதுகாப்பதே என பணி. அதாவது, ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக உள்ள அமைப்புகளை பாதுகாப்பது, ஏழைகளுக்காக குரல் கொடுப்பது, பிரதமர் மோடி உடனான உறவை தவறாகப் பயன்படுத்தும் அதானி போன்றவர்கள் குறித்த உண்மைகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவது ஆகியவையே எனது பணி.'' இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

# முதுநிலை பொறியியல் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு இன்று துவக்கம்
### அண்ணா பல்கலைக்கழகம் தகவல்

**சென்னை, மார்ச். 26-**

எம்.இ., எம்.டெக்., எம்.பிளான்., எம்.ஆர்க்., ஆகிய முதுநிலை பொறியியல் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு இன்று நடைபெற உள்ளது. மேலும் ஏப்ரல் 15-ம் தேதிக்குள் டான்செட் மற்றும் சி.இ.இ.டி.ஏ. தேர்வு முடிவுகள் வெளியிடப்படவுள்ளது என்று அண்ணா பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வு இயக்குனர் ஸ்ரீதர் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் இன்ஜினியரிங் கல்லூரிகள் மற்றும் கலை, அறிவியல் கல்லூரிகளில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., பயில, தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்வுக்கான (டான்செட்) தகுதி தேர்வு நேற்று தொடங்கியுள்ளது. எம்.இ., எம்.டெக்., எம்.பிளான்., எம்.ஆர்க்., ஆகிய முதுநிலை பொறியியல் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு (சி.இ.இ.டி.ஏ.) இன்று நடைபெற உள்ளது.

இந்த நிலையில் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் பொது நுழைவுத்தேர்வு இயக்குனர் ஸ்ரீதர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

டான்செட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கலந்தாய்வு கோவையில் நடைபெறவுள்ளது. டான்செட் தேர்வு எழுதிய மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்க விண்ணப்பிக்க வேண்டும். சி.இ.இ.டி.ஏ. தேர்வு எழுதிய மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்க விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., பயில டான்செட் தேர்வு தொடங்கியது.

எம்.டெக்., எம்.பிளான்., எம்.ஆர்க்., படிப்புகளில் சேர பொது பொறியியல் நுழைவுத் தேர்வு (சி.இ.இ.டி.ஏ.) இன்று தொடங்கவுள்ளது. டான்செட் தகுதி தேர்வை 34,228 பேர் எழுத உள்ளனர். சி.இ.இ.டி.ஏ. தேர்வுகளை 4,961 பேர் எழுதுகின்றனர். 15 முக்கிய நகரங்களில் உள்ள 40 மையங்களில் தேர்வுகள் நடைபெறுகின்றன.

இன்னும் ஒருவார காலத்துக்குள் விடைக்குறிப்பு அண்ணா பல்கலைக் கழக இணையதளத்தில் வெளியிடப்படும். விடைக்குறிப்பில் தவறுகள் இருப்பின் மாணவர்கள் திருத்தம் செய்யலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### கும்பகோணத்தில் ரயில் மறியல்:
# தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி மீது வழக்கு

**கும்பகோணம், மார்ச் 26-**


கும்பகோணம் ரயில் நிலையத்தில் ரயில் மறியலில் ஈடுபட்ட தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ் .அழகிரி உள்பட 3 பேர் மீது ரயில்வே இருப்புப் பாதை போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி குறித்து அவமதிக்கும் விதமாக கருத்துக்களை தெரிவித்த ராகுல் காந்திக்கு கடந்த 23-ம் தேதி சூரத் நீதிமன்றம் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை வதித்தது. இந்தத் தண்டனையை எதிர்த்து சென்னை செல்வதற்காக, கும்பகோணம் ரயில் நிலையத்திற்கு வந்த காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் அவருடன் வந்த தஞ்சாவூர் வடக்கு மாவட்டத் தலைவர் டி.ஆர்.லோகநாதன் உள்ளிட்டோர் தண்டவாளத்தில் அமர்ந்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து ரயில்வே இருப்புப் பாதை காவல் உதவி ஆய்வாளர் மனோகரன், காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி உள்பட 3 பேர் மீது, அனுமதியின்றி கூட்டம் திரட்டி, ரயிலை மறித்தது உள்ளிட்ட 3 பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். இந்த நிலையில் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருப்பதியில் வசந்த உற்சவ விழா: டிக்கெட்டுகள் நாளை வெளியீடு

**திருப்பதி, மார்ச் 27-**



திருப்பதியில் வசந்த உற்சவ விழாவை முன்னிட்டு டிக்கெட்டுகள் நாளை ஆன்லைனில் வெளியிடப்படுகின்றன.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வரும் ஏப்ரல் 3-ந் தேதி முதல் 5-ந் தேதி வரை வசந்த உற்சவ விழா நடைபெற உள்ளது. கோவிலுக்கு மேற்கு பகுதியில் உள்ள வசந்த மண்டபத்தில் தினமும் மதியம் 2 மணி முதல் மாலை 4 மணி வரை ஏழுமலையான் உற்சவ மூர்த்திகளுக்கு ஸ்னபன திருமஞ்சனம் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க விருப்பம் உள்ள பக்தர்களுக்காக திருப்பதி தேவஸ்தானம் நாளை காலை 10 மணிக்கு டிக்கெட்கள் Tirupati balaji.ap.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. ஆண்டுதோறும் வசந்த உற்சவ விழா தொடங்கி பவுர்ணமி அன்று நிறைவடைவது வழக்கம் அதன்படி 3-ந்தேதி காலை 7 மணிக்கு ஏழுமலையான், ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோர் 4 மாட வீதிகள் வழியாக வசந்த மண்டபத்தை சென்றடைகின்றனர். பின்னர் பூஜைகள் முடிந்து மாலை கோவிலுக்கு திரும்புகின்றனர்.

4-ந்தேதி காலை 8 மணி முதல் 10 மணி வரை ஏழுமலையான் 4 மாட விதிகளில் தங்க தேரில் வந்து பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார். அதன்பின் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது. 5-ந் தேதி ஸ்ரீதேவி, பூதேவி, சமேத ஏழுமலையான், சீதாராமர் லஷ்மணர், ஆஞ்சநேயர், ருக்மணி, கிருஷ்ணர் ஆகிய உற்சவ மூர்த்திகளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்ற பின்னர் கோவிலுக்கு வந்தடைகின்றனர். வசந்த உற்சவம் நடைபெறும் 3 நாட்களும் உற்சவ மூர்த்திகளுக்கு பால், தேன், தயிர், சந்தனம், மஞ்சள், இளநீர், சாதம் ஆகியவை மூலம் அபிஷேகம் ஆராதனை நடைபெறுகிறது. மாலை 6 முதல் 6-30 மணி வரை ஆஸ்தானம் கோலாகலமாக நடைபெறுகிறது. வசந்த உற்சவத்தையொட்டி வசந்த மண்டபம் பலவண்ண மலர்கள் மற்றும் பழங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டு உள்ளது. வசந்த உற்சவம் நடைபெறும் 3 நாட்களும் அஷ்டதள பாத பத்மாராதனை, கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆஜித பிரமோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

### வன்முறையை தூண்டியதாக
# சீமான் மீது 5 பிரிவுகளின் கீழ் திருச்சியில் வழக்குப்பதிவு

**திருச்சி, மார்ச் 26-**

வன்முறையை தூண்டியதாக சீமான் மீது 5 பிரிவுகளின் கீழ் திருச்சியில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது திருச்சி கண்டோன்மென்ட் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். ராஜீவ் கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டவர்களை திருச்சி சிறப்பு முகாமில் இருந்து விடுதலை செய்யக் கோரி திருச்சியில் கடந்த 3 தினங்களுக்கு முன் நாம் தமிழர் கட்சி சார்பில் சீமான் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு காவல்துறை அனுமதி அளிக்கவில்லை.

இதையடுத்து பொதுக்கூட்டம் போன்று மேடை அமைத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் சீமான் பேசும்போது, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன், முருகன் ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். காவல்துறை அனுமதி மறுக்கப்பட்டது குறித்தும் கடுமையாக விமர்சித்தார்.

இதையடுத்து, வன்முறையை தூண்டும் விதத்தில் பேசியது, சட்டவிரோதமாக கூடுதல், கலகம் செய்ய தூண்டுதல், அமைதியை சீர்குலைக்க தூண்டுதல் உள்ளிட்ட 5 பிரிவுகளில் சீமான் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் மீது திருச்சி கண்டோன்மென்ட் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.


# பாடகர் பாம்பே ஜெயஸ்ரீ உடல்நிலையில் முன்னேற்றம்: குடும்பத்தினர் தகவல்

**லண்டன், மார்ச் 26-**

பிரபல பின்னணி பாடகர் பாம்பே ஜெயஸ்ரீ உடல்நிலை சீராக உள்ளதாகவும், சில நாட்கள் ஓய்வு தேவைப்படுவதாகவும் அவரது குடும்பத்தினர் டுவிட்டரில் தகவல் தெரிவித்துள்ளனர்.


தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என பல்வேறு மொழிகளில் ஏராளமான மனம் மயக்கும் பாடல்களை பாடி தனக்கென தனி ரசிகர்களை உருவாக்கியவர் பாம்பே ஜெயஸ்ரீ. மெல்லிசை பாடல்களுக்காக தனித்து அறியப்படும் அவருக்கு பத்ம ஸ்ரீ விருது வழங்கி இந்திய அரசு கவுரவித்தது. 'லைஃப் ஆஃப் பை' படத்தில் இவர் பாடிய 'Pi's Lullaby' என்ற பாடல் சிறந்த ஒரிஜினல் பாடலுக்கான பிரிவில் நாமினேஷன் செய்யப்பட்டது. மேலும் மாநில அரசின் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றிருக்கிறார் பாம்பே ஜெயஸ்ரீ. இந்நிலையில், இசை நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக லண்டன் சென்ற பாம்பே ஜெயஸ்ரீயின் உடல்நிலை பாதிக்கப்பட்டு அங்கிருக்கும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருதாக தகவல் வெளியானது. தற்போது அவரது உடல்நிலை குறித்து பாம்பே ஜெயஸ்ரீயின் டுவிட்டர் பக்கத்தில் அவரது குடும்பத்தினர் விளக்கம் அளித்துள்ளனர். அதில், "இங்கிலாந்தில் பாம்பே ஜெயஸ்ரீயின் உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டது. அவருக்கு சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது. அவரது உடல்நிலை தற்போது சீராக உள்ளது. வேகமாக குணமடைந்து வருகிறார். இன்னும் 2 நாட்கள் ஓய்வெடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த காலகட்டத்தில் பாம்பே ஜெயஸ்ரீயின் குடும்பத்திற்கு உங்களின் ஆதரவும், ப்ரைவசியும் தேவை'' என பதிவிடப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...




கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டாலும் கூட அந்தோணியார் ஆலயத் திருவிழா, அடிப்படை வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றுக்கு இந்தியாதான் உதவி வருகிறது. எனவே, இந்திய அரசு தலையிட்டு கச்சத்தீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்ற ஆணையிட வேண்டும்.

**- ராமதாஸ்**




மோடியின் கண்களில் பயத்தை பார்த்ததாக ராகுல்காந்தி கூறி இருக்கிறார். காமாலை கண்களுக்கு பார்த்ததெல்லாம் மஞ்சளாகத்தான் தெரியும். தன்னுடைய எதிர்காலம் பாழாகி போகும் என்ற ராகுல் காந்தியின் அச்சத்தின் வெளிப்பாடு தான் இது.

**- பொன்.ராதாகிருஷ்ணன்**



தனியார் மயம் என்பது கம்யூனிஸ்டுகளால் ஏற்றுக் கொள்ள முடியாது. மின் தேவை அதிகரிப்பால் தனியார் பங்களிப்புடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை ஏற்க முடியவில்லை. அதை தமிழக அரசு கொஞ்சம் மறு பரிசீலனை செய்தால் நல்லாயிருக்கும்.

**- முத்தரசன்**



கடலூர் மாவட்டத்தின் அழிவுக்கு தமிழக அரசு தெரிந்தோ, தெரியாமலோ ஆதரவளிக்கக் கூடாது. கடலூர் மாவட்ட மக்களின் உணர்வுகளை மதித்து என்எல்சி சுரங்க விரிவாக்கத்திற்காக தமிழக அரசு ஓர் அங்குலம் நிலத்தைக் கூட கையகப்படுத்தாது என்று முதல்வர் அறிவிக்க வேண்டும்.

**- அன்புமணி**

# நத்தம் பகுதியில் 1 கோடியே 30 லட்சம் மதிப்பில் வளர்ச்சித் திட்ட பணிகளுக்கு பூமி பூஜை

## முன்னாள் அமைச்சர் விசுவநாதன் தொடங்கி வைத்தார்



**நத்தம்,மார்,26**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே முளையூர், நத்தம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குடகிப்பட்டிபுதூர், குட்டுப்பட்டி-மலையூர், ஆவிச்சிபட்டி ஊராட்சி நடுவனூர், சாத்தாம்பாடி, புன்னப்பட்டி ஊராட்சி உலுப்பகுடி மற்றும் செந்துரை சேர் வைகாரன்பட்டி ஊராட்சி பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1கோடியே 30 லட்சம் மதிப்பில் பள்ளி வகுப்பறை கட்டிடங்கள், கலையரங்கம், புதிய நியாய விலைகடை, சிமெண்ட் சாலை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளுக்காக பூமி பூஜை அந்தந்த ஊராட்சிகளில் நடந்தது.

இதை முன்னாள் அமைச்சரும், கழக துணை பொதுச் செயலாளருமான நத்தம் விசுவநாதன் எம்.எல்.ஏ தலைமை தாங்கி பூமி பூஜைகளை தொடங்கி வைத்தார்.

இதில் கழக ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன், அதிமுக நகர செயலாளர் சிவலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் மணிகண்டன், சின்னு, மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர்கள் ஜெயபாலன், சுப்பிரமணி,

மாவட்ட மாணவரணி இணை செயலாளர் அசாருதீன், நகர பேரவை செயலாளர் சேக்தாவூது, மாவட்ட கவுன்சிலர்கள் சின்னாக்கவுண்டர், பார்வதி, நகர அவைத்தலைவர் சேக்ஒலி, பொருளாளர் சீனிவாசன், உலுப்பகுடி கூட்டுறவு பால் பண்ணை தலைவர் சக்திவேல் உள்ளிட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஒன்றிய, பேரூராட்சி கவுன்சிலர்கள், ஒன்றிய நகர, கிளை கழக அதிமுக கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சேவுகம்பட்டி பேரூராட்சியில் 75 லட்சம் மதிப்பில் புதிய தார் சாலைக்கு பூமி பூஜை நடைபெற்றது



**வத்தலகுண்டு மார்ச்.26**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு ஒன்றியம் சேவுகம்பட்டி பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023 ஆண்டின் நிதி திட்ட மூலம் 75 லட்சம் மதிப்பில் நாகலாபுரம் முதல் பச்சப்பட்டி வரை நவீன தார் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை நடைபெற்றது.

சேவுகம்பட்டி திமுக நகர செயலாளர் தங்கராஜன் சேவுகம்பட்டி பேரூராட்சி தலைவர் வனிதா தங்கராஜன். துணைத் தலைவர் தெய்வ ராணி விஜயன். பேரூராட்சி செயல் அலுவலர் து கீதா. மற்றும் சேவுகம்பட்டி பேரூராட்சியில் அனைத்து வார்டு கவுன்சிலர்கள், திமுக அனைத்து பிரிவு நிர்வாகிகள் பேரூராட்சி அனைத்து பணியாளர்கள் ,

பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

# ஜோகிபட்டியில் திதியோஜன் திட்டம் துவக்கம்



**ஒட்டன்சத்திரம்.ஜன.26.**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் ஜோகிபட்டி ஊராட்சி சத்துணவு மையத்தில் திதியோஜன் திட்டத்தினை ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணி துவக்கி வைத்தார்.

திட்டத்தின்படி மாணவர்கள் அனைவருக்கும் வாழை இலையில் சத்துணவு பரிமாறப்பட்டது.

சத்துணவு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மாணவர்கள் பெற்றோருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்வில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கருணாநிதி, திட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வராஜேஸ்வரி, ஊராட்சி செயலர் சரவணன் உள்ளிட்ட வார்டு உறுப்பினர்கள் மாணவ, மாணவியர், பெற்றோர்கள், தன்னார்வளர்கள் உடன் இருந்தனர்.

# கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் புதிய இலச்சினை

## மீன்வள செயலாளர் அறிமுகப்படுத்தினார்



**சென்னை, மார்ச் 26-**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் புதிய இலச்சினையை மீன்வள செயலாளர் ஜதீந்திர நாத் ஸ்வைன் அறிமுகப்படுத்தினார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மீன்வள மேம்பாட்டிற்க்கான அர்ப்பணிப்பை சித்தரிக்கும் வகையில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் (CAA) புதிய இலச்சினை-ஐ, (மீன் வளம்) செயலாளர் ஜதீந்திர நாத் ஸ்வைன் இணையவழி மூலம் அறிமுகப்படுத்தினார்.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு மற்றும் புதுப்பிக்கப்படும் இறால் குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் இறால் வளர்ப்பு பண்ணையாளர்கள் வழங்கப்படும் மின்னனு சான்றிதழ்கள் மற்றும் இதர சான்றிதழ்களும், இணையமுறையில் வழங்கும் முறையை, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் தலைவரான ஓய்வுபெற்ற நீதியரசர் அமர் சிங் சௌஹான் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் எஸ்.முத்துக்கருப்பன், துணைத் தலைவர், அகில இந்திய இறால் குஞ்சு பொரிப்பகங்கள் சங்கம் எஸ்.சந்தான கிருஷ்ணன், நிறுவனர் தலைவர், நீர் மீன் வளர்ப்பு நிபுணர்களுக்கான சங்கம், கால்ராஜ், தலைவர், தமிழ்நாடு இறால் குஞ்சு பொரிப்பக சங்கம், ஜோஷி, செயலாளர், அகில இந்திய இறால் குஞ்சு பொரிப்பவர்கள் சங்கம், கே.மதுசூதன் ரெட்டி தலைவர், SAP, மற்றும் தமிழ்நாடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர், அலி உசேன், பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர். இறால் குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் இறால் வளர்ப்பு பண்ணையாளர்கள் சங்க சார்பில் கடலோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் சட்ட திருத்தத்தை விரைவில் அமல்படுத்தி, இறால் பண்ணை தொழில் எந்தவித சிக்கலும் இல்லாமல் நடைபெறுவதற்கு உதவுமாறு வலியுறுத்தப்பட்டது.



முதுகுளத்தூர் சுப்பிரமணியர் ஆலயத்தில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு முகூர்த்த கால் நடப்பட்டது.

# அலங்காநல்லூர் ஜும்மா பள்ளிவாசலில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



**அலங்காநல்லூர். மார்ச். 26-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜும்மாபள்ளிவாசலில் நேற்று முன்தினம் மாலை நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது முன்னதாக ரமலான் மாதத்தில் இரவு நேரங்களில் பள்ளிவாசல்களில் இரவு தொழுகையில் ஈடுபட்டனர் காலை 5.00 மணி முதல் மாலை 6:30 மணி வரை இறைவனுக்காக நோன்பு இருந்தனர் பின்னர் மாலை நேரத்தில் தண்ணீர் பேரிச்சம்பழம் மற்றும் தமிழக அரசு வழங்கிய பச்சரிசியின் மூலம் நோம்புகஞ்சி, தயார் செய்து அத்துடன் பழவகைகள் பஜ்ஜி, வடை, தண்ணீர்பழம், ஜூஸ், ரசனா, ரோஸ் மில்க், போன்றவை கொண்டு நோன்பு திறக்கப்பட்டது இந்த நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் பள்ளிவாசல் தலைவர் ஜவாஹிருல்லாகான் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் ஒன்றிய தலைவர் ரகுமான், திமுக ஒன்றிய சிறுபான்மை அணி பி.என்.அக்பர், மற்றும் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் ஒன்றிய செயற்குழு உறுப்பினர் மைதீன், பள்ளிவாசல் அஜரத், உட்பட ஜமாத் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்..

# விருதுநகர் மாவட்டத்தில் ரம்ஜான் நோன்பு துவங்கிய முஸ்லிம்கள்

**விருதுநகர் மார்ச் 26.**

விருதுநகர் மாவட்டத்தில் முஸ்லிம்கள் ரம்ஜான் நோன்பு துவங்கினர்.

விருதுநகர் மாவட்டத்தில் ரம்ஜான் மாதத்தில் முதல் நோன்பை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை 5 மணி முதல் மாலை 6:30 மணி வரை முஸ்லிம்கள் உணவருந்தாமல் இருந்தனர். மாலை நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கஞ்சியும், பேரிச்சம்பழமும் உண்டு நோன்பை திறந்தனர். ரம்ஜான் நோன்பின் முதல் நாளான நேற்று முன்தினம் விருதுநகரில் கல் பள்ளிவாசல்ஜமாத் பெரிய பள்ளிவாசல், சின்ன பள்ளிவாசல் ஜமாத் ஆகிய பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் சிறப்பு தொழுகை நடத்தினார்.

# தேசிய பங்கு சந்தையில் இணைந்த வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல்



**சென்னை, மார்ச். 26-**

திரைப்பட தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான வேல்ஸ் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தேசிய பங்கு சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில் முதல் நாளே இந்த நிறுவனத்தின் பங்குகள் லாபத்தில் வர்த்தகமாகியுள்ளது.

தேசிய பங்குச் சந்தையில் வேல்ஸ் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் பட்டியல் இடப்பட்டதை அடுத்து இதன் தொடக்க விழா சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பல தொழிலாதிவர்கள் மற்றும் திரையுலக பிரபலங்கள் ஐசரி கணேஷ் மற்றும் அவரது மகள் ப்ரீத்தா கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் ஐசரி கணேஷ் பேசும் போது,

எங்கள் நிறுவனத்தின் பங்கு தேசிய பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். வேல்ஸ் நிறுவனம் தொடக்கத்தில் வேல்ஸ் கல்வி அறக்கட்டளை என்ற பெயரில் தொடங்கப்பட்டது. கடந்த 1992-ம் ஆண்டு 39 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் தற்போது 40 ஆயிரம் மாணவர்கள் படிக்கும் கல்வி நிறுவனமாக வளர்ச்சி அடைந்துள்ளது என்றார்.

தொடர்ந்து எங்கள் நிறுவனத்திற்கு பொதுமக்கள் ஆதரவளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார். மேலும் முதலீட்டாளர்களுக்கு விரைவில் டிவிடெண்ட் எனப்படும் ஊக்கத்தொகையை வழங்குவதற்கும் முயற்சி செய்வேன் என்றும் அவர் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 70 ஆண்டு கால பொதுவாழ்க்கை பயணம் குறித்த"மக்கள் பயணத்தில் மாண்புமிகு முதலமைச்சர்"என்ற தலைப்பில் மதுரையில் நடைபெற்று வரும் பிரம்மாண்ட புகைப்படக் கண்காட்சியை தமிழக அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கே.கே.எஸ் எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பி.மூர்த்தி, தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடபட்டி மு.மணிமாறன், முன்னாள் எம்.எல்.ஏ., ம.முத்துராமலிங்கம் மற்றும் கட்சி நிர்வாகிகள் பார்வையிட்டனர்.



சிவகங்கை மாவட்டம் வைகளத்தூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புதுறையின் சார்பில் தமிழக அரசின் சாதனைகள் விளக்கும் புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

# பரமக்குடியில் சௌராஷ்டிரா தமிழ் சங்கம் கலந்துரையாடல்




**பரமக்குடி மார்ச் 26 :**

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் 2023 கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது.

மாநில இணை ஒருங்கிணைப்பாளர் பி.கே.நாகராஜன் தலைமை வகித்தார். பரமக்குடி சௌராஷ்டிரா சபை தலைவர் மாதவன், சௌராஷ்டிரா மத்திய சபை உப தலைவர்கள் கண்ணன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். எமனேஸ்வரம் சௌராஷ்டிரா சபை தலைவர் கோவிந்தன் வரவேற்றார்.

குஜராத் பொது நிறுவன கமிஷனர் ஐ.ஏ.எஸ்., அதிகாரி ரஞ்சித் குமார் நிகழ்ச்சிகளை தொகுத்து பேசினார்.குஜராத் சுற்றுலாத்துறை மற்றும் கலாச்சாரம் அமைச்சர் முலாபாயீ பேரா சிறப்புரை நிகழ்த்தினார்.

அப்போது காசி தமிழ் சங்கமம் போன்று குஜராத் மாநிலம் மற்றும் மத்திய அரசு இணைந்து சௌராஷ்ட்ராவிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள கலாச்சார உறவுகளை கண்டறியவும்உறுதிப்படுத்தவும் ஏப்ரல் 17 தொடங்கி 15 நாட்கள் குஜராத்தில் சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் நடக்கிறது. சௌராஷ்டிரா சமூகம் தனித்துவமான ஒரு வளமான வரலாறு மற்றும் கலாச்சாரத்தை கொண்டுள்ளது. இச்சங்கமம் மூலம் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு சௌராஷ்ட்ரியர்களின் வரலாற்றை அறிய வாய்ப்பளிக்கும்.ஒரே குடும்பம், ஒரே பூமி, ஒரே எதிர்காலம் என்று பொருள்படும் வகையில் 'வசுதைவ குடும்பம்', என்று பிரதமர் மோடி அடையாளம் காட்டியுள்ளார். இதன்படி இன்று ஏழு மாவட்டங்களில் சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் கலந்துரையுடன் நிகழ்ச்சி நடந்து வருகிறது, என்றார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் குமார், சண்முகராஜ், கங்காதரன், பிரகாஷ் ஏற்பாடுகளை செய்திருந்தனர். சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் மாவட்ட பொறுப்பாளர் அம்பலம் ரமேஷ் பாபு நன்றி கூறினார்.

# முதுகுளத்தூர் யூனியனைச்சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு பயிற்சி சான்றிதழ்





**முதுகுளத்தூர்மார்ச்26**

முதுகுளத்தூர் யூனியனைச்சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கபட்டது.

மதுரை மாவட்டம் டி. கல்லுபட்டியில் ஊரக வளர்ச்சித்துறையின் பயிற்சி மையத்தில் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த

வெங்கலகுறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.டி.செந்தில்குமார்-

அலங்கானூர் ஊராட்சி மன்ற தலைவர் வினோத்-கீரனூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜோதிமுனியசாமி ஆகியோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# அருப்புக்கோட்டையில் அண்ணாமலைக்கு வரவேற்பு

**அருப்புக்கோட்டை மார்ச் 26.**

அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி சென்ற தமிழக பாஜக மாநில தலைவர் அண்ணாமலைக்கு விருதுநகர் மாவட்ட நிர்வாகிகள் காந்திநகர் பைபாஸ் அருகில் வரவேற்பு அளித்தனர். இதில் மாவட்ட தலைவர் பாண்டுரங்கன், பொதுச் செயலாளர் சீதாராமன், மாவட்ட பார்வையாளர் வெற்றிவேல், மண்டல் தலைவர் பூலோக ராஜ், முருகானந்தம் ,நாகராஜன் ஓ பி சி மாவட்ட தலைவர் ஆசைத்தம்பி, மாவட்ட துணை தலைவர் ராமஜெயம் ,மாவட்ட விவசாய அணி தலைவர் அழகர்சாமி, ஊடகப்பிரிவு தலைவர் பிரதீப் உட்பட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில்
# மாபெரும் புத்தகத் திருவிழா: அமைச்சர்கள் க.பொன்முடி,செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தனர்



**விழுப்புரம் மார்ச் 26**

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் ஆகியோர் கலெக்டர் டாக்டர் சி.பழனி தலைமையில் விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் மயிலம் சட்டமன்ற உறுப்பினர் ச.சிவக்குமார் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் விழுப்புரம் நகராட்சி திடலில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (பபாசி) இணைந்து நடத்தும் மாபெரும் புத்தகத் திருவிழாவினை துவக்கி வைத்தனர்.

உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் உள்ள மாணவச் செல்வங்கள் அனைவரும் படிப்பறிவு மட்டுமல்ல பொது அறிவினையும் பெற வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் புத்தகத் திருவிழாவினை நடத்திட வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் நூலகங்களுக்கு சென்று புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தினை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற உயரிந்த நோக்கத்தில் புத்தகத் திருவிழாவினை நடத்திட உத்தரவிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் விழுப்புரம் மாவட்டத்தில் மாபெரும் புத்தகத் திருவிழா நடைபெற்று கொண்டிருக்கிறது.

முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் சென்னையில் திறந்து வைக்கப்பட்ட நூலகம் தான் ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகம் என்ற பெயரினை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இதைவிட பெரிய நூலகமாக மதுரையில் கலைஞர் நூலகத்தினையும் தமிழ்நாடு முதலமைச்சர் துவக்கி வைக்க உள்ளார்கள். இதுபோன்று விழுப்புரம் செஞ்சி மற்றும் திண்டிவனம் ஆகிய நகரப்பகுதிகளில் மாணவர்களின் பயன்பாட்டிற்கான நூலகம் அமைத்துக்கொடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களாகிய நீங்கள் பள்ளிப்புத்தகத்தை படிப்பதோடு மட்டுமில்லாமல் பொது அறிவினை வளர்க்கும் புத்தகங்களையும் படித்திட வேண்டும். பல்வேறு வரலாற்று எழுத்தாளர்களின் புத்தகங்களை நாம் படிப்பதன் மூலம் கடந்து வந்த பாதை எதிர்கொண்ட சவால்கள் அறிவாற்றல் மிக்க செயல்பாடுகள் போன்றவை குறித்து நாம் அறிந்து கொள்ள முடியும். இதன் மூலம் நம்வாழ்வில் ஏற்படுகின்ற இக்கட்டான சூழ்நிலைகளில் எதிர்கொள்ள வேண்டிய திறமைகளை நம்மில் வளரும். இங்கு வருகை புரிந்துள்ள பெரும்பாலான மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களாக இருப்பதால் இது போன்று கிடைக்கப்பெறும் நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பொது அறிவு சார்ந்த புத்தகங்களை படிப்பதன் மூலம் போட்டித்தேர்வுகளுக்கும் நாம் தயாராகிட முடியும்.

புத்தகத் திருவிழாவில் அதிகப்படியான அரசு பள்ளி மாணவியர்கள் வருகை தந்திருப்பது மிகப்பெரிய மகிழ்ச்சியாகும். மாணவியர்கள் நீங்கள் அனைவரும் தொடர்ந்து கல்வி பயின்றிட வேண்டும். ஏழ்மை நிலையினால் மாணவியர்கள் உயர்கல்வி கற்பதை விட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1 000/- ஊக்கத்தொகை வழங்கி வருகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவியர்களின் எண்ணிக்கை 27 சதவீதம் அதிகரித்துள்ளது. எனவே மாணவியர்கள் நல்ல முறையில் தங்கள் பள்ளிப்படிப்பினை முடித்து உயர்கல்வி பயின்றிட வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வி பயின்றிட வேண்டும் நோக்கில் உயர்கல்வியில் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை செயல்படுத்தியுள்ளார்கள். இதன் மூலம் இடஒதுக்கீட்டில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்லூரிக் கட்டணம் மற்றும் விடுதிக்கட்டணமின்றி கல்வி பயின்று வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாணவர்களின் நலன் நான் முதல்வன் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் படிக்கின்ற காலகட்டத்திலேயே வேலைக்கான பயிற்சிகளை பெற வேண்டும் என்பதற்காக அருகாமையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மாணவர்களை நேரில் அழைத்துச் சென்று செயல் விளக்க முறையில் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கை 53 சதவீதமாக உள்ளது. இதனை 75 சதவீதத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உயர்கல்வித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள். உயர்கல்வியில் எண்ணிக்கை சதவீதத்தை உயர்த்தினால் மட்டும் போதாது மாணவர்கள் திறனை வளர்த்துக்கொள்வதற்கான பன்னாட்டு கல்வி முறையோடு பாடத்திட்டங்களை உருவாக்க வேண்டும் என அறிவுறுத்தியதன் அடிப்படையில் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் படிக்கும்பொழுதே அரசு போட்டித்தேர்வு எழுதுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காகத்தான் நீங்கள் தேடிச் சென்றாலும் கிடைத்திடாத பல அறிய தகவல்கள் அடங்கிய அறிவுத்திறனை வளர்க்கும் புத்தகங்களை தங்கள் பகுதிகளுக்கே கொண்டு வரும் நோக்கத்திலேயே புத்தகத் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் அதிகப்படியான எண்ணிக்கையில் குடிமைப்பணிகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையிலும் போட்டித்தேர்விற்கு தயாராகும் மாணவர்களை ஊக்கப்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசின் மூலம் குடிமைப்பணிகள் தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1 000 மாணவர்களுக்கு முதல் நிலை தேர்வுக்கு தயாராக மாதம் ரூ.7 500/- ஊக்கத் தொகையும் முதன்மைத் தேர்வுக்கு ரூ.25 000/- ஊக்கத் தொகை வழங்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள்.

மாணவ மாணவியர்கள் நீங்கள் ஒவ்வொரும் பள்ளி மற்றும் கல்லூரிப்படிப்பினை நல்ல முறையில் படித்து தேர்ச்சி பெறுவதுடன் போட்டித்தேர்வுகளில் பங்கேற்று அரசுப் பணிகள் பெறுவதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே புத்தகத் திருவிழா நடைபெற்று வருகிறது. இதனை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் அறிவுறத்திறனை வளர்த்துக்கொள்வதோடு தங்கள் எதிர்கால வாழ்க்கையினை சிறப்பானதாக மாற்றிக்கொள்வதற்கான முயற்சிகளை இன்றே மேற்கொள்ள வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி தெரிவித்தார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே புத்தக வாசிப்புத்திறனை அதிகப்படுத்திடும் விதமாக மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழாவினை நடத்திட உத்தரவிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் விழுப்புரம் மாவட்டத்தில் மாபெரும் புத்தகத் திருவிழா இன்றிலிருந்து 05.04.2023 வரை நடைபெறவுள்ளது. இப்படியொரு அறிய நிகழ்வு விழுப்புரம் மாவட்டத்திற்கு கிடைத்தது மகிழ்ச்சியுடன கூடிய மற்றொரு சிறப்பம்சமாகும். மனிதன் யார் என்பதை உணர வைப்பதில் புத்தகத்தின் பங்கு இன்றியமையாததாக உள்ளது.

தமிழர்களின் வாழ்வியல் முறைகள் பண்பாடு கலாச்சாரம் போன்றவைகள் எப்படி எல்லாம் தோன்றியது இதன் பெருமைகள் குறித்து நாம் அறிந்து கொள்ள முடியும் என்றால் அது புத்தகத்தின் வாயிலாகத்தான் முடியும் புத்தகத்தில் உள்ள கருத்துக்கள் காலத்தால் அழிக்க முடியாதது ஒரு புத்தகத்தில் இடம் பெறும் அறிய தகவல்கள் இன்றைய தலைமுறையினர் மட்டுமல்லாமல் வருகின்ற தலைமுறையினரும் அறிந்து கொள்ள முடியும். ஆகவே புத்தகத்தில் இடம்பெறும் அனைத்து தகவல்களும் இன்றைய செய்தி நாளைய வரலாறு ஆகும்.

மாணவர்கள் பள்ளி மற்றும் கல்லூரி புத்தகத்தை படிப்பதோடு மட்டுமில்லாமல் பொது அறிவு மற்றும் நற்கருத்துக்களை வளர்த்திடும் புத்தகங்களையும் படித்திட வேண்டும். அப்பொழுதுதான் எதிர்காலத்தில் இப்புத்தகங்களை எழுதி இருப்பவர்களின் வரலாறு வெளியிடுவோர்களின் வரலாற்றுடன் புத்தகத்தில் உள்ள வரலாற்றினை அறிந்து கொண்டு பயன்பெற்று பின்பற்றுவதன் மூலம் நீங்களும் எதிர்காலத்தில் வரலாறாக மாற முடியும்.

தமிழ்நாடு முதலமைச்சர் பெண் கல்வி இடைநிற்றலை தவிர்த்திடும் பொருட்டு புதுமைப் பெண் திட்டத்தினை செயல்படுத்தினார்கள். இத்திட்டத்தின் மூலம் மாணவியர்களுக்கு மாதந்தோறும் ரூ.1 000/- ஊக்கத் தொகை வழங்கப்படுவதால் மாணவிகள் யாருடைய உதவியும் இன்றி தொடர்ந்து உயர்கல்வி பயிலும் நிலை உருவாகியுள்ளது.

புத்தகத்திருவிழாவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் புத்தகங்கள் இடம்பெற்றுள்ளதால் மாணவர்கள் ஒவ்வொரும் தங்கள் விருப்பத்திற்கேற்ற புத்தகத்தினை தேர்வு செய்து படித்து தங்கள் அறிவாற்றலையும் பொது அறிவினையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தெரிவித்தார்.

இந் நி கழ்ச் சி யில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் விழுப்புரம் நகர்மன்ற தலைவர் ச.தமிழ்ச்செல்வி பிரபு மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் சே.ஷீலா தேவி சேரன் விழுப்புரம் நகர்மன்ற துணைத் தலைவர் எஸ்.சித்திக் அலி மாவட்ட வருவாய் அலுவலர் மு.பரமேஸ்வரி திண்டிவனம் சார் ஆட்சியர் கட்டா ரவி தேஜா தென்னிந்திய புத்தக விற்பனையாளர் (ம) பதிப்பாளர் சங்கம் தலைவர் எஸ்.வைரவன் செயலாளார் எஸ்.கே.முருகன் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கோ.கிருஷ்ணப்பிரியா செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ. கொ.நாகராஜ பூபதி நகராட்சி ஆணையர் சுரேந்திரஷா உட்பட பலர் கலந்துகொண்டனர்.



**புதுச்சேரி மாநிலம் திருக்காஞ்சி ஸ்ரீ கங்கவராக நதீஸ்வரர் தேவஸ்தான சங்கராபரணி மேஷ குரு ஆதி புஷ்கர விழாவை முன்னிட்டு வேளாண்துறை அமைச்சர் தேனி. ஜெயக்குமார் தலைமையில்ஏ.டி.ஜி.பி.ஆனந்தமோகன்,எஸ்.எஸ்.பி.நாக.சைதன்யா,எஸ்.பிக்கள்நித்தியா, ரவிக்குமார்,மோகன் குமார்,டி.எப்.ஓ. இளங்கோ, தாசில்தார் கார்த்திகேயன்,காவல் ஆய்வாளர் வேலையன், வில்லியனூர் பஞ்சாயத்து ஆணையர் ஆறுமுகம், உதவி ஆய்வாளர்கள் சண்முக சத்யா,வேலு, கொமியூன் பஞ்சாயத்து உதவி பொறியாளர் கருத்தையன், இளநிலை பொறியாளர் ரங்கமன்னார் ஆகியோர் பாதுகாப்பு குறித்து ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.**



**கடலூர் மாவட்டம், குறுஞ்சிப்பாடியில் உள்ள பெருமாள் ஏரி தூர்வாரி கரைகள் பலப்படுத்தும் பணி நடைபெற்று வருவதை கலெக்டர் பாலசுப்பிரமணியம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பொதுப்பணித்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் உள்ளனர்.**

### கடலூர் மாவட்டத்தில்
# வேலைவாய்ப்பு முகாம்: கலெக்டர் பாலசுப்பிரமணியம் தகவல்

**கடலூர் மார்ச் 26**

கடலூர் மாவட்ட மகளிர் திட்டம் மூலம் வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு (ஆண்கள்/பெண்கள் இருபாலரும்) வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரும் வகையில் வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 01.04.2023 சனிக்கிழமை அன்று திட்டக்குடி ஸ்ரீ சொர்ணம் ஆறுமுகம் கல்யாண மண்டபத்தில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை நடைபெறவுள்ளது. இம்முகாமில் மகளிர் திட்டம் தொழில் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கும் மாவட்டத்தில் உள்ள தொழிற்கல்வி மற்றும் பொதுக்கல்வி படித்த அனைத்து இளைஞர்களுக்கும் (ஆண்கள்/பெண்கள் இருபாலரும்) வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தரும் வகையில் நடத்தப்படவுள்ளது.

இம்முகாமில் கடலூர் மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்புற இளைஞர்கள் அனைவரும் (ஆண்கள்/பெண்கள் இருபாலரும்) கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடலூர் மாவட்ட மகளிர் திட்டம் மூலம் இளைஞர் தொழில்திறன் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் இதர கல்வி தகுதிகளையுடைய மற்ற இளைஞர்களும் தங்களது அசல் கல்வி சான்றிதழ்கள் மதிப்பெண் பட்டியல் பள்ளி மாற்று சான்றிதழ் சாதி சான்று இருப்பிட சான்று வருமானச் சான்று குடும்ப அடையாள அட்டை ஆதார் அட்டை இத்துடன் இரண்டு (பாஸ்போர்ட் சைஸ்) புகைப் படங்கள் சுய விலாசமிட்ட அஞ்சல் உறைகளுடன் மேற்படி முகாமில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பினை பெற்று பயனடையுமாறு கலெக்டர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திருக்க வேண்டும். முகாமில் கலந்து கொள்ளும் போது முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளி கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும் இதர தகவல்களுக்கு மகளிர் திட்ட அலுவலகம் பூமாலை வணிக வளாகம் BSNL ழுகக¡உந எதிரில் பு.ர்.சுழயன கடலூர் - 607001 என்ற முகவரியில் கீழ்கண்ட தொலைபேசி எண்களில் அலுவலகம் 04142-292143 உதவி திட்ட அலுவலர்களின் கைபேசி எண்கள்: 9444094261 APO (S&P) 9444094258 APO (IB &CB) தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

### 52 கிராம பெண்களுக்கு
# விவசாயத்தில் கூட்டு பண்ணை பயிற்சி




**அரக்கோணம் மார்ச் 26**

ராணிபேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம் காஞ்சிபுரம் நெடுஞ்சாலை கல்லாறு அருகில் எஸ்ஆர்இடி எனும் கிராம பெண்கள் கல்வி முன்னேற்ற சங்கத்தில் கிராம பெண்கள் எல்லோரும் விவசாயத்திலும், வாழ்க்கை யில் முன்னேற்றம் அடையும் முயற்சியாக கூட்டு பண்ணை அமைக்கும பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக இயற்கை கூட்டு விவசாயம் குறித்து சகிலா மற்றும் கரூர் மாவட்டத்தை சேர்ந்த இயற்கை விவசாயி சரோஜா வரவழைக்கப்பட்டு இருந்தார். இந்த இருவரும் பயிற்சி யின் போது பனகிழங்கில் மற்றும் கேழ்வரகு உள்ளிட்டவற்றில் இருந்து மாவு தயாரிப்பது. மானாவாரி பயிர்களில் பருப்பு வகைகள் உற்பத்தி செய்ய நவீன உத்திகள் குறித்து திரைபடத்தின் நேர்த்தியாக எடுத்துரைத்தனர். இதன் பயனை பள்ளூர், தக்கோலம், நெமிலி, நாகவேடு, சித்தேரி, சிவாடா, காவேரிராஜபுரம் போன்ற 10ற்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து 52பேர் வந்திருந்து பயனடைந்தனர். முன்னதாக பயிற்சி யினை தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்க தலைவர் பர்னாட் பாத்திமா துவக்கி வைத்தார். கிராம பெண்கள் கல்வி முன்னேற்ற சங்க ஒருங்கிணைப்பாளர் சாந்தி நிகழ்ச்சி ஏற்பாடுகளை வரவேற்றார் . நிகழ்ச்சி க்கு உறுதுணையாக நெமிலி சிரோன்மணி, உமா ஆகியோர் ஈடுபட்டனர். சரஸ்வதி இறுதியில் நன்றி கூறினார்.

# கார் ஓட்டுனர் சங்க துவக்க விழா: 1000 பேருக்கு இனிப்பு,அன்னதானம்

**அரக்கோணம் மார்ச் 26**

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் திருத்தணி சாலை வள்ளலார் பள்ளி அருகில் அரக்கோணம் ஆக்டிங் கார் ஓட்டுனர் அசோஷியேசன் சார்பில் 2ஆம் ஆண்டு துவக்க விழா நேற்று . கொண்டாடப்பட்டது. இதற்காக 1000 பேருக்கு இனிப்பு களும், அன்னதானமும் வழங்கப்பட்டது. இந்த அன்னதான விழாவிற்கு அசோஷியேசன் கவுரவ தலைவர் டி. வெங்கடேசன் தலைமை தாங்கினார்.

அசோஷியேசன் தலைவர் லட்சுமணன் மற்றும் செயலாளர் பி. சைமன் சரவணன் முன்னிலை வகித்தனர். பொருளாளர் சண்முகம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக சட்ட ஆலோசகர் அரிகலபாடி வழக்கறிஞர் ஆர். ரவி அன்னதானமும் மற்றொரு வழக்கறிஞர் டி. ரமேஷ் இனிப்பு களையும் வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளில் துணை செயலாளர் கள் ஜெய்லாபாய் மற்றும் சங்கரன் உட்பட நிர்வாகிகளும் ஈடுபட்டனர். இறுதியில் துணை தலைவர் கே. முருகன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில்
# உயர் பரிசோதனைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்
### ஆம் ஆத்மி கட்சி, மக்கள் வாழ்வுரிமை இயக்கம் வலியுறுத்தல்

**புதுச்சேரி மார்ச் 26**

புதுச்சேரிமக்கள் வாழ்வுரிமை இயக்கச் செயலாளர் கோ.அ.ஜெகன்நாதன், ஆம் ஆத்மி கட்சி மாநிலச் செயலாளர் ஆலடி கணேசன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில்

புதுச்சேரி, காரைக்கால் ஜிப்மர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்ற, ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டம், சிவப்பு நிற குடும்ப அட்டை இல்லாத நோயாளிகளிடம், உயர் சிகிச்சை பரிசோதனைகளுக்காக ஏப்ரல் மாதம் முதல் கட்டணம் வசூலிக்கப்படும் எனும் உத்தரவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என ஆம் ஆத்மி கட்சி, மக்கள் வாழ்வுரிமை இயக்கம் அறிக்கை வாயிலாக வலியுறுத்துகிறது.

ஜிப்மர் மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து, அனைத்து பிரிவு சிகிச்சை துறை தலைவர்களுக்கும், சுற்றறிக்கை கீழ்க்கண்டவாறு அனுப்பப்பட்டுள்ளது.

ஜிப்மர் மருத்துவமனையில் உயர் ரக மருத்துவ பரிசோதனை சிகிச்சைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கானக் கட்டணங்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீடு திட்டம், புதுவை மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள சிவப்பு நிற குடும்ப அட்டை இல்லாத, (மஞ்சள் நிற அட்டை) வைத்துள்ள ஏழை எளிய நோயாளிகளிடம் மருத்துவ பயன்பாட்டுக் கட்டணங்கள் வசூலிக்க வேண்டும். அவ்வாறு வசூலிக்கப்படும் அந்தத் தொகையினை ஜிப்மர் நிறுவன வருவாய் கணக்கில் சேர்க்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி மட்டுமல்லாது தென் தமிழகத்தின் மிகப்பெரும் மருத்துவமனையாக, மக்களுக்கு உயிர் காக்கும் மருத்துவ சேவைகள் ஆற்றி வரும் ஜிப்மர் மருத்துவ மனை மேற்கண்ட கட்டண வசூலிப்பு உத்தரவின் மூலம், மக்களுக்கு மருத்துவ சேவை செய்து வரும் கடமையிலிருந்து நழுவிச் செல்வதையே வெளிச்சம் போட்டு காட்டுவதாக அமைந்துள்ளது. அடிப்படை பரிசோதனைகள் இலவசமாக செய்வதுபோல், அனைத்து ஏழை மக்களுக்கும் பாகுபாடு இன்றி உயர் வகை மருத்துவ பரிசோதனைகளை பாகுபாடின்றி இலவசமாகவே செய்ய வேண்டுமென எமது இயக்கங்கள் மத்திய அரசையும் ஜிப்மர் நிர்வாகத்தையும் வலியுறுத்துகிறது.ஜிப்மர் மருத்துவமனை கண்காணிப்பாளரின் இத்தகைய கட்டண வசூலிப்பு உத்தரவினால் கடுமையாக பாதிக்கப்படுவது புதுச்சேரி மாநில ஏழை எளிய மக்கள்தான் என்பதை நினைவில் கொண்டு பழைய நிலையிலேயே கட்டணம் இல்லா மருத்துவ பரிசோதனை சேவைகளை தொடர்ச்சியாக வழங்கிட வேண்டும். அனைத்து துறை சிகிச்சை தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள கட்டண வசூலிப்பு உத்தரவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என எமது இயக்கங்கள் மக்கள் நலன் சார்ந்து வலியுறுத்துகிறது. இல்லையெனில் ஆம் ஆத்மி கட்சி-மக்கள் வாழ்வுரிமை இயக்கம் சார்பாக மக்களை திரட்டி ஜிப்மர் மருத்துவமனை முன்பு தொடர் போராட்டங்களை நடத்துவோம் என மருத்துவ மனை நிர்வாகத்திற்கு கண்டனத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் என அறிக்கையில் வெளியிட்டுள்ளனர்.



**இந்திய தேசிய முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் எம்.பி பதவி நீக்கத்தை கண்டித்து முன்னாள் அரசு கொறடா ஆனந்தராமன் தலைமையில் புதுச்சேரி காந்தி சிலை அருகே மாநில காங்கிரஸ் நிர்வாகிகள் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



**புதுச்சேரியில் தொழிலதிபர் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி ரூ.38 லட்சம் மற்றும் 82 சவரன் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளி கிருஷ்ணகுமார் உள்ளிட்ட 10 பேரை போலீசார் கைது செய்து அவர்களிடம் இருந்து ரூ.14 லட்சம் பணம் மற்றும் நகைகளை மீட்டனர். மேலும் இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள 3 பேரை தேடி வருகின்றனர், இவ்வழக்கின் முக்கிய குற்றவாளியான கிருஷ்ணகுமாரை போலீசார் பிடித்தபோது தவறி விழுந்ததில் கையில் முறிவு ஏற்பட்டது.**

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### திருவொற்றியூர் மாதவரம்

# திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



**திருவொற்றியூர் மார்ச் 26-**
சென்னை வடகிழக்கு மாவட்ட கழக அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில், மாதவரம் பேருந்து நிலையம் எதிரில் உள்ள ராஜராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை ஓர்ஆண்டு முழுவதும் கிளை கழகம் முதல் மாவட்ட கழகம் வரை பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், திமுக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் துண்டறிக்கைகள் மூலம் எடுத்துக் கூறி 16 வயது நிரம்பியவர்கள் முதல் திமுக உறுப்பினர் சேர்க்கையை தீவிர படுத்தவும், பூத்கமிட்டி முறையாக முழு விவரங்களுடன் அமைத்திடவும் கேட்டுக் கொண்டு மாவட்ட கழக செயலாளர் எஸ்.சுதர்சனம் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மண்டலக் குழு தலைவர்கள் தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், மாதவரம் எஸ்.நந்தகோபால், மிசா ப.மதிவாணன், வி.இராமநாதன், அறிவழகி பாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், துக்காராம், புழல் நாராயணன், பரந்தாமன், இரா.முருகேசன், வை.ம.அருள்தாசன், ஜெய்மதன் சரவணன், பி.எஸ்.சைலஸ் மற்றும் பேரூர் ஒன்றிய பகுதி வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**ராமாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாமன்ற உறுப்பினர்கள் வ.செல்வகுமார், க.ராஜூ ஆகியோர் ஆய்வு செய்தனர்.**

### 139 அரசு பள்ளிகள்

# சென்னை மாநகராட்சியுடன் இணைப்பு: 35 ஆயிரம் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்

**சென்னை மார்ச் 26-**
சென்னை மாநகராட்சி மூலம் மழலைய பள்ளி முதல் மேல்நிலைப்பள்ளி வரை நடத்தப்பட்டு வருகிறது. சுமார் 1 லட்சம் மாணவ-மாணவிகள் மாநகராட்சி பள்ளியில் படித்து வருகிறார்கள்.

பள்ளி கட்டிடங்கள், அடிப்படை வசதிகளுடன் மாநகராட்சி பள்ளிகள் தன் பங்களிப்பை வழங்கி வருவதால் ஏழை, நடுத்தர குடும்பத்தை சேர்ந்த குழந்தைகள் அதிகளவில் படித்து வருகின்றனர். தனியார் பள்ளிகளுக்கு இணையாக ஸ்மார்ட் வகுப்பறைகளும் உள்ளன.

இந்நிலையில் சென்னை நகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் கடந்த சில வருடங்களாக பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த பள்ளிகள் இருந்தாலும் கூட அரசு பள்ளிகளாக செயல்பட்டு வந்தன. இதனால் நிர்வாக ரீதியான பிரச்சினை உருவானது.

திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கி இந்த பள்ளிகள் செயல்பட்ட வந்தன. சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள இத்தகைய பள்ளிகளை மாநகராட்சி பள்ளிகளுடன் இணைக்க வேண்டும் என்று கவுன்சிலர்கள் வலியுறுத்தினர்.அதன் அடிப்படையில் எத்தனை பள்ளிகள் இது போன்று உள்ளன என ஆய்வு செய்யப்பட்டது. திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 139 அரசு பள்ளிகள் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டது.

அந்த பள்ளிகளை மாநகராட்சியுடன் இணைக்க வேண்டு என மன்ற கூட்டத்திலும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. அதன்படி 139 அரசு பள்ளிகள் சென்னை மாநகராட்சியுடன் சமீபத்தில் இணைக் கப் பட் ட ன.அந்த பள்ளிகள் "சென்னை பள்ளிகள்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. அங்கு படித்த 35 ஆயிரம் மாணவ-மாணவிகள் தொடர்ந்து கல்வியை தொடர சென்னை மாநகராட்சி அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

மாநகராட்சி கல்வி துறை மூலம் இனி இதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இப்பள்ளிகளின் வளர்ச்சி பணிகள் செயல்படுத்தப்படும்.

### மெட்ரோ ரயில் நிலையங்களில்

# பயண அட்டை இருந்தால் மட்டுமே வாகனங்களை நிறுத்த அனுமதி

**சென்னை மார்ச் 26-**
பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு மெட்ரோ ரெயில் பயண அட்டை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளது.

இந்த நடைமுறையானது மிகவும் திறமையான, வசதியான மற்றும் பாதுகாப்பான கட்டண முறைக்காகவும், பணப்புழக்கத்தை குறைக்க வேண்டிய தேவைக்காகவும் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயணிகள் வாகன நிறுத்தும் இடங்களில் வேகமாக நுழைவது, வெளியேறுவது, பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மை, பணமில்லா பரிவர்த்தனைகள் போன்ற நன்மைகள் கிடைக்கும்.பயணிகள் மெட்ரோ ரெயில் பயண அட்டையை அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்ட்டர்களிலும், வாகன நிறுத்தும் இடத்திலும் பெற் றுக் கொள் ள லாம். வாகன நிறுத்தும் இடத்துக்கான அனுமதி பயண அட்டைகளுடன் மட்டுமே இந்த பயண அட்டை கிடைக்கும்.

இந்த நடைமுறை அடுத்த மாதம் (ஏப்ரல்) 19-ந்தேதி அமலுக்கு வர உள்ளது. எனவே அனைத்து பயணிகளும் மெட்ரோ ரெயில் பயண அட்டைகளை விரைவாக பெற சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.



**தமிழகத்தில் மகளிரை காவல்துறை பணியில் சேர்த்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்து சென்னையில் இருந்து கன்னியாகுமரி நோக்கி பேரணியில் ஈடுபட்டுள்ள மகளிர் போலீசாரைதூத்துக்குடிமாவட்டஎல்கையானகோவில்பட்டிதோட்டிலோவன்பட்டிபகுதியில் கலெக்டர் செந்தில்ராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன் ஆகியோர் தலைமையில் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. கோவில்பட்டி டி. எஸ். பி. வெங்கடேஷ் மற்றும் காவல் ஆய்வாளர்கள் உதவி ஆய்வாளர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.**



**திருத்தணி முருகன் கோவிலில் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தனது மகனுடன் சாமி தரிசனம் செய்தார். கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.**

### முட்டுக்காடு படகு குழாம் வளாகத்தில்

# 2 அடுக்கு மிதக்கும் உணவக கப்பல் : ரூ.5 கோடி மதிப்பில் பிரமாண்டமாக உருவாகிறது

**சென்னை மார்ச் 26-**
முட்டுக்காடு படகு குழாம் வளாகத்தில் ரூ.5 கோடி மதிப்பில் பிரமாண்டமான 2 அடுக்கு மிதக்கும் உணவக கப்பல் கட்டுமான பணியை சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் தொடங் கி வைத் தார். சென்னை சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் படகு இல்லம் இயக்கப்பட்டு வருகிறது. இந்த படகு இல்லத்தில் பொதுமக்கள் சாகச பயணம் மேற்கொள்ளும் வகையில் மிதவை படகுகள், எந்திர படகுகள், வேகமான எந்திர படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் கொச்சியைச் சேர்ந்த கிராண்ட்யூனர் மரைன் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் மூலமாக தனியார் மற்றும் பொது பங்களிப்பு திட்டத்தின் மூலம் ரூ.5 கோடி மதிப்பில், தமிழ்நாட்டில் முதல் முறையாக மிதவை உணவக கப்பல் அமைக்கப்படுகிறது. இதற்கான கட்டுமான பணியை சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக தலைவர் டாக்டர் சந்தரமோகன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குனர் சந்தீப் நந்தூரி, செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ராகுல் நாத், திருப்போரூர் சட்ட மன்ற உறுப்பினர் பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த மிதக்கும் உணவகத்தின் தரைத்தளம் முழுவதும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் அமைக்கப்பட உள்ளது. முதல் தளம் திறந்தவெளியாகவும், சுற்றுலா பயணிகள் மேல் தளத்தில் அமர்ந்து உணவு உண்டு பயணிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.இந்த கப்பலில் சமையலறை, சேமிப்பறை, கழிவறை மற்றும் எந்திர அறை அமைக்கப்பட உள்ளது. இந்த மிதவைக்கப்பல் 60 குதிரை சக்தி திறனுடைய எந்திரம் மூலம் இயக்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட உள்ளது.

2 அடுக்கு உணவக பயண கப்பலின் மொத்த நீளம் 125 அடி, அகலம் 25 அடி ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியில் திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் இதயவர்மன், முட்டுக்காடு ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொது மேலாளர் பாரதி தேவி, கிராண்ட்யூனர் மரைன் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் ஜோஜி செபஸ்தியான், ஒஜெஸ் செபஸ்தியான் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சென்னையை சேர்ந்தவரிடம்

# அதிக கமிஷன் தருவதாக ஏமாற்றி ரூ.33 லட்சம் மோசடி செய்த நைஜீரியர்கள் கைது

**சென்னை மார்ச் 26-**
ஆயுர்வேத தொழிலில் முதலீடு செய்தால் அதிக கமிஷன் தருவதாக கூறி சென்னையை சேர்ந்தவரிடம் ரூ.33 லட்சம் மோசடி செய்த நைஜீரியர்கள் கைது செய்யப்பட்டனர். கொளத்தூர் பூம்புகார் நகர் பகுதியை சேர்ந்தவர் விஜயராகவன். இவர் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் கடந்த டிசம்பர் மாதம் புகார் மனு ஒன்றை அளித்திருந்தார். அதில், 'நைஜீரிய நாட்டை சேர்ந்த நபர் ஒருவர் ' LINKEDIN என்ற இணையதள முகவரி வாயிலாக என்னை தொடர்புக்கொண்டார்.ஆயுர்வேத மூலப்பொருட்களை சப்ளை செய்வதற்கு ஒரு வணிக கட்டமைப்பு உருவாக்கி உள்ளோம். இதில் மூலப் பொருட்கள் வாங்குவதற்கு பணத்தை முதலீடு செய்தால் கமிஷன் தொகை தருவதாகவும் கூறினார். இதனை உண்மை என்று நம்பி அவர்கள் கூறிய 2 வங்கி கணக்குகளில் ரூ.33 லட்சத்து 30 ஆயிரம் பணத்தை 8 பரிவர்த்தனைகள் மூலம் முதலீடு செய்தேன். ஆனால் அந்த நைஜீரியர் சொன்னபப்டி கமிஷன் தொகை தரவில்லை. நான் முதலீடு செய்த பணத்தையும் மோசடி செய்துவிட்டார்.' என்று கூறியிருந்தார்.

சென்னை போலீஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் உத்தரவின் பேரில் இந்த புகார் மனு மீது மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து புலன் விசாரணை நடத்தினர்.

இதில் மும்பை கார்கர் பகுதியில் தங்கிருந்து நைஜீரியர் நாட்டு கும்பல் இது போன்ற மோசடி செயலை அரங்கேற்றி வருவது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை போலீசார் மும்பை விரைந்தனர். அவர்கள் தங்கியிருந்த பகுதியை சுற்றி வளைத்தனர்.

பின்னர் மோசடி கும்பலை சேர்ந்த நைஜீரியர்கள் ஒகோரிகாட்ஸ்வில் சைனாசா (வயது 32), உச்சே ஜான் இமேகா (47), காட்வின் இமானுவேல் (32), எபோசி உச் சென்னா ஸ்டான்லி (32) ஆகிய 4 பேரை அதிரடியாக கைது செய்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர்கள் குறிப்பிட்ட இந்த இணையதளம் மூலம் இதே பாணியில் பலரிடம் மோசடியை அரங்கேற்றி இருப்பது தெரியவந்தது.

இந்த நிலையில் இணைய தளங்கள் மூலம் வியாபாரம் தொடங்கும் முன்பு தீர விசாரிக்க வேண்டும்.

ஆசை வார்த்தைகளை நம்பி அறிமுகம் இல்லாத நபர்களுக்கு பணம் அனுப்ப கூடாது என்று சென்னை போலீஸ்துறை சார்பில் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளது.

### வங்கியில் கடன் வாங்கி தருவதாக

# ஆன்லைன் மூலம் ரூ. 2.50 லட்சம் மோசடி: டெல்லி கும்பல் கைது

**சென்னை மார்ச் 26-**
வங்கியில் கடன் வாங்கி தருவதாக ஆன்லைன் மூலம் ரூ.2½ லட்சம் மோசடி செய்த டெல்லி கும்பலை போலீசார் கைது செய்தனர். சென்னை மேற்கு மாம்பலம் தனபால் தெருவைச்சேர்ந்தவர் பழனிச்சாமி (வயது 62). இவர் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனுவில் கூறி இருப்பதாவது:-

குமரன் பைனான்ஸ் என்ற நிதி நிறுவனம் பெயரில், வங்கியில் குறைந்த வட்டிக்கு கடன் பெற்றுத்தருவதாக ஆன்லைனில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. எனக்கு அது தொடர்பான எஸ்.எம்.எஸ். தகவலும் வந்தது. அது தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்களிடம் பேசியபோது, நம்பிக்கை அளிக்கும் வகையில் பேசி, முதலில் கமிஷன் தொகையை அனுப்ப சொல்லி, வங்கி கணக்கு ஒன்றை அனுப்பி வைத்தனர். அந்த வங்கி கணக்கில் ரூ.2½ லட்சத்தை கமிஷனாக அனுப்பி வைத்தேன். ஆனால் கடன் எதுவும் வாங்கி தராமல், நான் அனுப்பி வைத்த பணத்தை மோசடி செய்து விட்டனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுத்தர வேண்டும்.இவ்வாறு புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இது தொடர்பாக தென் சென்னை சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். இந்த மோசடியில் ஈடுபட்டதாக டெல்லியைச் சேர்ந்த விஸ்வநாதன் (29), துரைமுருகன் (24), ராஜேஷ் (33) ஆகிய 3 பேரை தனிப்படை போலீசார் டெல்லி சென்று கைது செய்தனர். கைதானவர்களிடம் ரூ.1½ லட்சம் மற்றும் மோசடி செய்ததற்கான ஆவணங்கள், செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. கைதான 3 பேரும் சென்னை அழைத்துவரப்பட்டு, நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் மூவரும் தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவர்கள். போலியான நிதி நிறுவனத்தை அடையாளப்படுத்தி, இதுபோல ஆன்லைன் மூலம் ஏராளமான பேர்களிடம் மோசடி செய்துள்ளனர்.

# மதுரவாயலில் லாரி மீது மோட்டார் சைக்கிள் மோதி வாலிபர் சாவு

**சென்னை மார்ச் 26-**
குன்றத்தூர் அடுத்த நந்தம்பாக்கம் பூந்தண்டலம் பகுதியை சேர்ந்தவர் சுரேஷ்குமார் (வயது 26) சாப்ட்வேர் என்ஜினீயர். இவர் நேற்று அதிகாலை 4.30 மணி அளவில் பணி முடிந்து மோட்டார் சைக்கிளில் மதுரவாயல் பைபாஸ் சாலை வழியாக வீடு திரும்பிக்கொண்டு இருந்தார்.வானகரம் அருகே வந்தபோது சாலையோரத்தில் இரும்பு கம்பி லோடுடன் நிறுத்தப்பட்டு இருந்த டிரெய்லர் லாரி ஒன்றின் மீது சுரேஷ்குமாரின் மோட்டார் சைக்கிள் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட அவர் தலையில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.இதுதொடர்பாக தூத்துக்குடியைச் சேர்ந்த லாரி டிரைவர் கிருஷ்ண குமார் (வயது 42) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

# எழும்பூரில் சொத்து வரி செலுத்தாத 203 வீடுகளுக்கு சீல்

**சென்னை மார்ச் 26-**
சென்னை மாநகராட்சி பகுதிகளில் சொத்துவரி செலுத்தாதவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த ஆண்டுக்கான சொத்து வரி செலுத்த இன்னும் 1 வார கால அவகாசம் உள்ளது. எனவே அதிகாரிகள் சொத்துவரியை வசூலிக்க அதிரடி நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர்.

சென்னை எழும்பூர் எத்திராஜ் சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 550-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இதில் உள்ள 203 வீடுகள் கடந்த 6 ஆண்டுகளாக சொத்து வரி செலுத்தவில்லை. இதன் மூலம் ரூ.31 லட்சம் சொத்துவரி பாக்கி உள்ளது.

இது குறித்து சென்னை மாநகராட்சி சார்பில் பலமுறை நோட்டீசு அனுப்பபட்டது. ஆனால் அந்த குடியிருப்பில் வசிப்பவர்கள் பதில் அளிக்கவில்லை. இதையடுத்து இந்த 203 வீடுகளுக்கும் சீல் வைக்க அதிகாரிகள் முடிவு செய்தனர்.

அதன்படி ராயபுரம் உதவி வருவாய் அலுவலர்கள் தலைமையில் 20 பேர் கொண்ட குழுவினர் அடுக்குமாடி குடியிருப்புக்கு சென்றனர். அங்கு சொத்துவரி செலுத்தாத 203 வீடுகளுக்கும் சீல் வைத்தனர்.

# ஸ்காட் கல்வி நிறுவனங்கள் சார்பில் விளையாட்டு விழா



**நெல்லை.மார்ச்.26.**
சேரன்மகாதேவி ஸ்காட் கல்வி நிறுவனங்கள் சார்பாக விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. இதில் ஸ்காட் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தொழிற்பயிற்சி நிலையம், ஸ்காட் சிறப்பு பள்ளி மானவ, மாணவிகள் சுமார் 2500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.. இவ்விழாவிற்கு ஸ்காட் நிறுவனர் டாக்டர் கிளிட்டஸ் பாபு தலைமை தாங்கினார். தாளாளர் திருமதி. பிரியதர்ஷினி அருண்பாபு முன்னிலை வகித்தார். ஸ்காட் பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர். ஜஸ்டின் திரவியம் அனைவரையும் வரவேற்றார். அன்வர் ராஜா ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக காவல் கண்காணிப்பாளர் PP. சரவணன் திருநெல்வேலி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக . உதயகுமார் ஆசிய வலுதூக்கும் போட்டியில் பதக்கம் வென்றவரும் விளையாட்டு துறை மூலம் தபால் துறையில் பணியாற்றும் முன்னாள் மாணவரும் கவுரவிக்கப்பட்டனர். இவ்விழாவில் இந்த கல்வி ஆண்டில் தடகள போட்டிகள் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம் பெற்ற பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கவுரவிக்கப்பட்டனர். உள்விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், தனிநபர் சாம்பியன் பட்டம், ஒட்டுமொத்த சாம்பியன் பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. பின்னர் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், சிலம்பம் நடைபெற்றது. உடற்கல்வி இயக்குனர் திருமதி. அலிஸ் பொன்ராணி நன்றி கூறினார். இவ்விழாவில் ஸ்காட் நிறுவன பொதுமேலாளர்கள் தம்பிதுரை, கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர்கள் மணிமாறன், திருமதி. பியுலா, காசி விஸ்வநாதன். நாகராஜன், நிர்வாக அலுவலர்கள் ஜெயபாண்டி ,சித்திரை சங்கர் மற்றும் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# ராஜேந்திரா விஸ்டம் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி ஆண்டு விழா

**சுரண்டை, மார்ச்.26**
சுரண்டை, ராஜேந்திரா விஸ்டம் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில் 12 வது ஆண்டு விழா மற்றும் மழலையர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. தமிழ்ச் செல்வி அம்மா, பள்ளியின் முதல்வர் பொன்மானோன்யா குத்துவிளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்தனர். குழல்வாய் மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், செயலர் சிவ டிப்ஜினிஸ்ராம் நிகழ்ச்சியை வழி நடத்தினர்.தலைமையாசிரியர் முருகராஜ் விழாவை பொறுப்பேற்று நடத்தினார்.மாணவி ஜெசிகா வரவேற்புரை வழங்கினாள்.வில்லுப்பாட்டு, வரவேற்பு நடனமாக சிவ தாண்டவம்,மாறுவேடப்போட்டி,விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நாடகம், பட்டிமன்றம் மற்றும் மாணவர்களின் கண்ணைக் கவரும் நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றனர்.சிறப்பு விருந்தினராக டிரசர் ஐலண்ட் பள்ளியின் முதல்வர் சமீமா பர்வின் கலந்து கொண்டு கடந்த ஆண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி உற்சாகப்படுத்தினார். மாணவன் ஜெகதீஷ் நன்றியுரையை வழங்கினான்.மாணவிகள் ஆதர்சனா மற்றும் அஸ்விதா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர் . ஆசிரியைகள் பிரதீபா மற்றும் ஈஸ்வரி விழாவை ஒருங்கிணைத்தனர். தேசிய கீதத்துடன் விழா இனிதே முடிவடைந்தது.

# தூய்மைப் பணியாளரை தற்கொலைக்கு தூண்டிய நபர்களை கைது செய்ய வேண்டும் : சிபிஐ வலியுறுத்தல்

**திருச்செந்தூர் மார்ச்.26-**
உடன்குடி தூய்மைப் பணியாளர் சுடலைமாடன் தற்கொலைக்கு காரணமான ஆயிஷா கல்லாசி, பேரூராட்சி செயல் அலுவலர் பாபு ஆகியோரை கைது செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது

இது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டசெயலாளர் பி.கரும்பன் விடுத்துள்ள அறிக்கையில் "உடன்குடி நேர்வுநிலை பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றி வரும் சுடலைமாடன், பணி மூப்பு அடிப்படையில் தூய்மைபணி மேற்பார்வையாளர் பதவிஉயர்வு வழங்கவேண்டும் என பேரூராட்சிதலைவர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் பாபு ஆகியோரிடம் முறையிட்டுள்ளார். பேரூராட்சிதலைவர், தனது மாமியாரும், முன்னாள் பேரூராட்சி தலைவர், ஆயிஷா கல்லாசியை அணுகுமாறு சுடலைமாடனிடம் வலியுறுத்தியுள்ளார்.

அதனடிப்படையில் தூய்மை பணியாளர் சுடலைமாடன், முன்னாள் பேரூராட்சி தலைவர் ஆயிஷா கல்லாசியை அணுகிய பொழுது, பதவிஉயர்வுக்கு லஞ்சப்பணமக் கேட்டுள்ளார். அதற்கு மறுப்பு தெரிவித்ததால் சுடலைமாடனை ஜாதிபெயரை சொ ல்லி அவதூறாக ஆயிஷா நல்லாசி பேசியுள்ளார். இந்தகுற்ற செய்கைக்கு செயல் அலுவலர் பாபு உடந்தையாக இருக்கின்றார்.

இதனல் மனமுடைந்த சுடலைமாடன் கட ந்த 17ம் தேதி விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். தூத்துக்குடி அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சுடலைமாடன் நேற்று காலை மரணமடைந்துள்ளார். தூய்மை பணியாளர் சுடலைமாடன் மரணத்திற்கு காரணமான முன்னாள் பேரூராட்சி தலைவர் ஆயிஷா கல்லாசி அவருக்கு உடந்தையாக இருந்த தற்போதைய பேரூராட்சி தலைவர் மற்றும் செயலக அலுவலர் பாபு ஆகியோர் மீது தற்கொலைக்கு தூண்டுதல், வன்கொடுமை தடுப்பு சட்டம், ஊழல் தடுப்புசட்டம் மூன்று சட்டங்களின் கீழ் பதிவுசெய்து, கைது செய்ய வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது என்றும் தமிழக காவல்துறை அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிடில் உரிய சட்டங்களின் கீழ் வழக்குபதிவு செய்ய உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

கோப்பையை வெல்லப்போவது யார் ?

# ‘மகளிர் பிரீமியர் லீக்’ இறுதியில் டெல்லி-மும்பை இன்று மோதல்



மும்பை, மார்ச் 26-

‘மகளிர் பிரீமியர் லீக்’ இறுதியில் கோப்பையை வெல்லப்போவது யார் என்ற ஆவல் ரசிகர்கள் இடையே மேலோங்கியுள்ள நிலையில் இன்று டெல்லி-மும்பை அணிகள் இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

**மகளிருக்கான...**

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) ஐ.பி.எல். போட்டியை போலவே மகளிருக்கான பிரீமியர் லீக் போட்டி அறிமுகம் செய்தது. முதலாவது மகளிர் பிரீமியர் லீக் 20 ஓவர் போட்டி மும்பையில் கடந்த 4-ம் தேதி தொடங்கியது. இதில் மும்பை இந்தியன்ஸ், குஜராத் ஜெயின்ட்ஸ், டெல்லி கேப்பிடல்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, உ.பி. வாரியர்ஸ் ஆகிய 5 அணிகள் பங்கேற்றன.

**தலை 2 முறை...**

ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதின. கடந்த 21-ந் தேதியுடன் லீக் ஆட்டங்கள் முடிந்தன. இதன் முடிவில் டெல்லி அணி முதல் இடத்தை பிடித்து இறுதிப் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றது. மும்பை, 2-வது இடத்தையும், உ.பி. வாரியர்ஸ் 3-வது இடத்தையும் பிடித்து ‘பிளேஆப்’ சுற்றுக்கு முன்னேறின. பெங்களூரு, குஜராத் அணிகள் முறையே 4-வது, 5-வது இடங்களை பிடித்து வெளியேறின.

**எலிமினேட்டர்...**

நேற்று முன்தினம் எலிமினேட்டர் ஆட்டம் நடந்தது. இதில் மும்பை அணி 72 ரன் வித்தியாசத்தில் உ.பி. வாரியர்சை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. முதலில் ஆடிய மும்பை அணி 20 ஓவர் 4 விக்கெட் இழப்புக்கு 182 ரன் குவித்தது. பின்னர் விளையாடிய உ.பி. வாரியர்ஸ் 110 ரன்னில் சுருண்டது.

**இன்று இறுதி...**

மகளிர் பிரீமியர் லீக் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று (26-ந் தேதி) நடக்கிறது. மும்பை பிராபோர்ன் மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் இந்த போட்டியில் மேக் லேனிங் தலைமையிலான டெல்லி கேப்பிட்டல்ஸ் - ஹர்மன் பிரீத் கவூர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன.

**விறுவிறுப்பாக...**

இரு அணிகளும் சமபலம் பொருந்தியவை என்பதால் இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரு அணிகளும மோதிய லீக் ஆட்டத்தில் தலா ஒன்றில் வெற்றி பெற்றன. மும்பை அணி 8 விக்கெட்டில் வென்று இருந்தது. டெல்லி அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இருந்தது. டெல்லி அணியின் கேப்டன் மேக் லேனிங் 310 ரன் குவித்து முதல் இடத்தில் உள்ளார். மும்பை அணியில் புருன்ட் 272 ரன் எடுத்துள்ளார். மும்பை அணியின் சாய்னா இஷாக் 15 விக்கெட் வீழ்த்தி 2-வது இடத்தில் உள்ளார்.

## சூர்யகுமார் யாதவுக்கு ஆதரவாக யுவராஜ் டுவீட்

அண்மையில் முடிந்த ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் மூன்று முறை முதல் பந்திலேயே ரன் ஏதும் எடுக்காமல் டக் அவுட்டாகி இருந்தார் சூர்யகுமார் யாதவ். இந்தச் சூழலில் யுவராஜ் அவருக்கு ஆதரவு கொடுத்துள்ளார். முதல் இரண்டு போட்டிகளில் ஸ்டார்க் வேகத்திலும், கடைசிப் போட்டியில் ஆஷ்டன் அகர் சுழலிலும் அவர் தனது விக்கெட்டை இழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், யுவராஜ் தனது ஆதரவை அவருக்கு கொடுத்துள்ளார். “ஒவ்வொரு விளையாட்டு வீரரும் தங்களது கரியரில் ஏற்ற, இறக்கங்களை எதிர்கொள்வர். நாம் அனைவருமே இதை ஏதேனும் ஒரு கட்டத்தில் எதிர்கொண்டு இருப்போம். சூர்யகுமார் யாதவ் இந்திய அணியில் மிக முக்கிய வீரர் என நான் நம்புகிறேன். உலகக் கோப்பையில் அவருக்கு வாய்ப்பு கிடைத்தால் முக்கிய பங்களிப்பை அவர் கொடுத்து அசத்துவார். நம் வீரர்களுக்கு நாம் துணை நிற்க வேண்டும். நம் சூர்யா நிச்சயம் எழுச்சி பெறுவார்” என யுவராஜ் அந்த ட்வீட்டில் தெரிவித்துள்ளார்.

## பிரிதிவி ஷா யார் என்பது இந்த ஐபிஎல்.லில் தெரியும்: பாண்டிங்

ஐபிஎல் 2023 தொடர் இந்த மாத இறுதியில் தொடங்குகின்றது. டெல்லி கேப்பிடல்ஸ் அணியின் தொடக்க வீரர் பிரிதிவி ஷா, ஏற்கெனவே டேவிட் வார்னருடன் சேர்ந்து சிலபல இன்னிங்ஸ்களை ஆடியுள்ளார். இதுவரை பிரிதிவி ஷா மொத்தம் 63 ஐபிஎல் போட்டிகளில் ஆடி 1588 ரன்களைத் தான் எடுத்துள்ளார். சராசரி 25 தான். 99 அதிகபட்ச ஸ்கோர். ஸ்ட்ரைக் ரேட் 147. 14 அரைசதங்களை அடித்துள்ளார். கடந்த ஐபிஎல் சீசனில் 10 போட்டிகளில் வெறும் 283 ரன்களையே எடுத்துள்ளார்.

இந்நிலையில் டெல்லி கேப்பிடல்ஸ் அணியின் பயிற்சியாளர் ரிக்கி பாண்டிங் இவர் மீது அபரிமிதமான நம்பிக்கையை வைத்துள்ளார். அவர் கூறியதாவது: “முன்னெப்போதையும் விட பயிற்சியில் கடுமையாக உழைத்திருக்கிறார். சிறப்பாகவும் ஆடுகின்றார். இதற்கு முன்னால் பார்த்ததை விட அவரது உடல் வடிவமும் முன்பை விட நன்றாக உள்ளது. அன்றொரு நாள் அவரிடம் அவரது அணுகுமுறை பற்றி பேசினேன். ஒன்று மட்டும் புரிந்தது இந்த ஐபிஎல் சீசன் இவருக்கு பெரிதாக அமையும் என்றே கருதுகிறேன். அவரது திறமையை வைத்துப் பார்க்கும் போது உண்மையான பிரிதிவி ஷா-வை இந்த சீசனில் நீங்கள் காணலாம் என்று தெரிவித்துள்ளார்.

## ஆர்.சி.பி. அணியுடன் இணைந்தார் கோலி

இந்தாண்டுக்கான ஐபிஎல் தொடர் வருகிற 31-ந் தேதி கோலாகலமாக தொடங்குகிறது. இந்த தொடரின் முதல் போட்டியாக குஜராத் டைட்டன்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதுகிறது. இந்த தொடருக்காக தற்போது அனைத்து அணிகளை சேர்ந்த வீரர்களும் தயாராகி வருகின்றனர்.

இந்தியா - ஆஸ்திரேலியா தொடர் முடிவடைந்த நிலையில் விராட் கோலி இன்று பெங்களூரு அணியுடன் இணைந்துள்ளார். இது தொடர்பான புகைப்படத்தை அணி நிர்வாகம் தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இந்த புகைப்படத்தை ஆர்சிபி ரசிகர்கள் அதிகமாக ஷேர் செய்து வருகின்றனர்.

ரெயில்வே பணி நியமனத்தில் முறைகேடு:

# மத்திய விசாரணை அமைப்புகள் முன் தேஜஸ்வி-மிசா பாரதி ஆஜர்

புதுடெல்லி, மார்ச் 26-

ரெயில்வே பணி நியமனத்தில் முறைகேடு வழக்கில் மத்திய விசாரணை அமைப்புகளான சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறை முன்பு லல்லு பிரசாத் யாதவின் மகனும் பீகார் துணை முதல்வருமான தேஜஸ்வி மற்றும் லல்லு பிரசாத் யாதவின் மகள் மிசா பாரதியும் ஆஜராகினர்.

பீகார் முன்னாள் முதல்வரும், ராஷ்டீரிய ஜனதாதள கட்சியின் நிறுவனருமான லாலுபிரசாத் யாதவ் 2004 முதல் 2009 வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மத்திய ரெயில்வே மந்திரியாக பணியாற்றினார். அப்போது ரெயில்வே பணி நியமனத்தில் முறைகேடு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. பலரிடம் நிலத்தை லஞ்சமாக பெற்றுக் கொண்டு ரெயில்வேயில் வேலை வழங்கியதாக அவர் மீது புகார் கூறப்பட்டது.

இதுதொடர்பாக சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இதேபோல அமலாக்கத்துறையும் விசாரணை நடத்துகிறது. இதைதொடர்ந்து லாலு மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்காக டெல்லியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு கோர்ட்டில் ஆஜராக சம்மன் அனுப்பட்டு இருந்தது. இதைத்தொடர்ந்து லாலுபிரசாத் யாதவ், அவரது மனைவி ராப்ரிதேவி, மகள் மிசா பாரதி ஆகியோர் கடந்த 15-ந்தேதி ஆஜரானார்கள். அப்போது அவர்களுக்கு கோர்ட்டு ஜாமீன் வழங்கியது.

இந்நிலையில் ரெயில்வே பணிக்கு நிலத்தை லஞ்சமாக பெற்ற வழக்கு தொடர்பாக லல்லுபிரசாத் யாதவின் மகனும், பீகார் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவ் நேற்றஉ ஆஜராக சி.பி.ஐ. சம்மன் அனுப்பி இருந்தது. இதை தொடர்ந்து அவர் நேற்றஉ காலை டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜராக சென்றார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறும்போது “நாங்கள் எப்போதும் விசாரணை அமைப்புகளுக்கு ஒத்துழைக்கிறோம். ஆனால் தற்போது நாட்டின் நிலைமை என்ன வென்றால் போராடுவது மிகவும் கடினமாகிவிட்டது. இதைத் எதிர்த்து போராட முடிவு செய்துள்ளோம். நாங்கள் வெற்றி பெறுவோம்” என்றார்.

சி.பி.ஐ. அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு தேஜஸ்வி யாதவ் ஆஜரானார். அவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள். தொடர்ந்து அவரி டம் சி.பி.ஐ. விசாரணை நடைபெற்றது. அவர் ஏற்கனவே 3 முறை சம்மனுக்கு ஆஜராகாமல் இருந்தார். இதற்கிடையே இதே வழக்கில் லல்லுவின் மகளும், எம்.பி.யுமான மிசா பாரதி நேற்று ஆஜராக அமலாக்கத்துறை சம்மன் அனுப்பி இருந்தது.

இதை தொடர்ந்து மிசா பாரதி அமலாக்கத்துறை அலுவலகத்தில் நேற்று காலை ஆஜரானார். அவரி டம் அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள். விசாரணை தொடர்ந்து நடைபெற்றது. லாலு பிரசாத் யாதவின் மகன் தேஜஸ்வியிடம் சி.பி.ஐ.யும், மகள் மிசா பாரதியிடம் அமலாக்கத் துறையும் டெல்லியில் நேற்று ஒரே நேரத்தில் விசாரணை நடத்தியது. டெல்லியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

13-வது உலக மகளிர் குத்துச்சண்டை:

# இந்தியாவின் போரா, நிது தங்கம் வென்று சாதனை



டெல்லி, மார்ச் 26-

சீன வீராங்கனையை வீழ்த்தி இந்தியாவின் ஸ்வீட்டி போரா மற்றும் நிதி தங்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

13-வது உலக மகளிர் குத்துசண்டை சாம்பியன்ஷிப் போட்டி டெல்லியில் நடந்து வருகிறது. 81 கிலோ பிரிவின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இதில், இந்தியாவின் ஸ்வீட்டி போரா சீனாவின் வாங் லீனா வை எதிர் கொண்டார். பரபரப்பான நடந்த இந்த ஆட்டத்தில் சீன வீராங்கனை லீனானை 4-3 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி இந்தியாவின் ஸ்வீட்டி போரா தங்கப்பதக்கம் வென்று சாதனைபடைத்தார்.

81 கிலோ எடைப்பிரிவில் சீன வீராங்கனையை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் ஸ்வீட்டி போராவுக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. முன்னதாக இந்திய வீராங்கனை நிது கங்காஸ் மங்கோலிய வீராங்கனை லுட்சிஹன் அட்லெட்செட்கை எதிர் கொண்டார். போட்டி துவங்கியது முதலே நிது கங்காஸ் ஆதிக்கம் செலுத்தினார். இறுதியில் 5-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் மங்கோலிய வீராங்கனையை வீழ்த்தி இந்தியாவின் நிது கங்காஸ் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். 48 கிலோ எடைப் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற நிது கங்காஸ்க்கு பல்வேறு தரப்பிலும் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளது.

முதல் ஒருநாள் போட்டி:

# இலங்கையை வீழ்த்தியது நியூசி.

ஆக்லாந்து, மார்ச் 26-

இலங்கைக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 76 ரன்னில் சுருண்டி 198 ரன்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி அபாரமாக வெற்றிப் பெற்றது. இந்த வெற்றி மூலம் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

**சுற்றுப்பயணம்...**

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இலங்கை கிரிக்கெட் அணி அங்கு 2 டெஸ்ட், 3 ஒருநாள், 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று ஆடி வருகிறது. இதில் முதலாவதாக நடைபெற்ற டெஸ்ட் தொடரை 2-0 என நியூசிலாந்து கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் ஆக்லாந்தில் நடைபெற்று வருகிறது.

**274 ரன்கள் குவிப்பு...**

இந்தப்போட்டிக்கான டாசில் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அணி 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 274 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 275 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. நியூசிலாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் சொற்ப ரன்னில் விக்கெட்டுகளை பறிக்கொடுத்தனர். இலங்கை அணியில் மேத்யூஸ் 18, கருரத்னே 11, லகிரு குமாரா 10 ஆகியோர் மட்டுமே இரட்டை இலக்க ரன்கள் எடுத்தனர்.

**நியூசி., முன்னிலை...**

நியூசிலாந்து தரப்பில் ஹென்றி ஷிப்லி 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 2-வது ஒருநாள் போட்டி வருகிற 28-ந் தேதி நடைபெறுகிறது.

36 செயற்கை கோள்களுடன்

# ஜி.எஸ்.எல்.வி. மார்க் 3 ராக்கெட் இன்று விண்ணில் பாய்கிறது

சென்னை, மார்ச் 26-

36 செயற்கை கோள்களுடன் ஜி.எஸ்.எல்.வி. மார்க் 3 ராக்கெட் இன்று காலை விண்ணில் பாய்கிறது.

இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி. மார்க்-3 ராக்கெட் 36 செயற்கை கோள்களுடன் இன்று (26-ந் தேதி) விண்ணில் பாய்கிறது. ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தின் 2-வது தளத்தில் இருந்து இன்று காலை 9 மணிக்கு விண்வெளிக்கு புறப்படுகிறது. ஒன் வெப் விண்வெளி செயற்கை கோள்களில் 2-வது மற்றும் கடைசி தொகுதி செயற்கை கோள்களை இது சுமந்து செல்கிறது.

தற்போது ஏவப்படும் 36 செயற்கை கோள்களின் மொத்த எடை சுமார் 5805 கிலோ ஆகும். எல்.வி.எம்.3 ராக்கெட்டுகள் 8 டன் எடை வரை சுமந்து செல்லும் திறன் கொண்டது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. இங்கிலாந்தை தலைமையகமாக கொண்ட ஒன் வெப், இங்கிலாந்து அரசு மற்றும் இந்தியாவின் பாரதிய நிறுவனத்தின் ஆதரவுடன் அதிவேக தாமதமில்லா உலகளாவிய தொலை தொடர்பு மற்றும் இணைய இணைப்பை வழங்குகிறது.

இண்டிகோ விமானத்தில்

# தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ் தம்பதியருக்கு பாராட்டு

கோவை, மார்ச் 26-

ஆஸ்கர் விருது பெற்ற ‘தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்’ ஆவணப்படத்தின் நாயகர்களாக அறியப்படும் பொம்மன், பெள்ளி தம்பதியர் இண்டிகோ விமானத்தில் பயணித்துள்ளனர். அந்தப் பயணத்தின்போது காட்டின் பேர் உயிர் என அறியப்படும் யானையை பாதுகாத்து வளர்க்கும் அவர்களது பணிக்காக விமான கேப்டன் மற்றும் குழுவினர், சக பயணிகள் என அனைவரும் அவர்களைப் பாராட்டி உள்ளனர்.

அந்த வீடியோவை தமிழ்நாடு அரசின் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு ஐஏஎஸ் பகிர்ந்துள்ளார். அது பரவலாக கவனம் பெற்று வருகிறது. அண்மையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த தம்பதியரை அழைத்து நிதி உதவி வழங்கி பாராட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தெப்பக்காடு யானைகள் முகாமில் ரகு மற்றும் அம்மு என இரண்டு யானை குட்டிகளை பேணிக் காத்தனர் பொம்மன், பெள்ளி தம்பதியர். தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ் ஆவணப்படத்திலும் அதுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது தர்மன் என்ற பெயரில் தாயை இழந்த குட்டி யானையை இவர்கள் கவனித்து வருகின்றனர்.

இந்த தம்பதியரின் வாழ்க்கை கதை பலருக்கு உத்வேகம் கொடுத்துள்ளது. அதோடு இந்தியாவில் யானைகள் பாதுகாப்பு சார்ந்த பணிகளில் பலரையும் ஈர்த்துள்ளது. வனவிலங்குகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும் இந்த ஆவணப்படம் கவனம் ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாநிலங்கள் கல்வி தரத்தை உயர்த்தி கொள்ள உரிமை வழங்க வேண்டும்

மத்திய அரசுக்கு அமைச்சர் பொன்முடி கோரிக்கை

சென்னை, மார்ச் 26-

மாநிலங்கள் கல்வி தரத்தை உயர்த்தி கொள்ள உரிமை வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அமைச்சர் பொன்முடி கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய கல்வி வளர்ச்சி குழுமம் சார்பில் உயர்கல்வியில் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டு பிடிப்புகள் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம் சென்னையில் நடந்தது. நிகழ்ச்சிக்கு அமைப்பின் தலைவரும் வி.ஐ.டி. வேந்தருமான விசுவநாதன் தலைமை தாங்கினார்.

விழாவில் தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி பேசுகையில்., கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்களை ஒருங்கிணைத்து இந்திய கல்வி வளர்ச்சி குழுமம் நடத்தும் இந்த கருத்தரங்கு பயனுள்ளது. அனைத்து மாநிலங்களையும் அவர்கள் கல்வி கொள்கையை பின்பற்ற மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். மாநிலங்கள் தங்கள் கல்வி தரத்தை உயர்த்திக் கொள்ள உரிமை வழங்கபட வேண்டும். பாலிடெக்னிக் கல்லூரிகளில் தற்போது மாணவர்களின் சேர்க்கை குறைந்து வருகிறது. அதனை மேம்படுத்த தொழில்துறை 4.0 திட்டம் அறிமுகபடுத்தப் பட்டுள்ளது. புதிய கல்வி கொள்கையில் ஒரு சில வரவேற்க தக்க நல்ல விஷயங்கள் இருந்தாலும் அதில் நுழைவு தேர்வு உள்ளிட்ட பல முடிவுகளை நாங்கள் எதிர்க்கிறோம்.

3-ம் வகுப்பு படிக்கும் குழந்தைகளுக்கு நுழைவு தேர்வு வைத்தால் அவர்கள் எவ்வாறு எழுத முடியும். அனைத்து மாநிலங்களுக்கும் தங்களுக்கென தனி கல்வி கொள்கை வைத்துள்ளது. மாநிலங்கள் ஊக்கப்படுத்த பட வேண்டும்,அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். பூனை செல்வதற்கு ஒரு ஓட்டை எலி செல்வதற்கு ஒரு ஒட்டையா என முன்னாள் முதல்வர் அண்ணாவின் வார்த்தைகளை சுட்டிக் காட்டி எங்களுக்கு 2 மொழிகள் போதும். மூன்றாவதாக ஒரு மொழியை திணிக்ககூடாது. இது தொடர்பாக ஏஐசிடிஇ தலைவருக்கு கோரிக்கை வைக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா:

# கவர்னர் ஆர்.என்.ரவி சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை

சென்னை, மார்ச் 26-

ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா குறித்து தமிழக கவர்னர் ஆர்.என். ரவி சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஆன்லைன் ரம்மி சூதாட்டத்தால் ஏராளமான பொது மக்கள் பணத்தை இழந்து தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் தமிழகத்தில் அதிகரித்து வந்தது. இதனால் ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா தமிழக சட்டசபையில் கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ந்தேதி நிறைவேற்றப்பட்டு கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் இந்த சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் வழங்காமல் முதலில் சில விளக்கங்கள் கேட்டு இருந்தார். அதற்கு சட்டத்துறையில் இருந்து தேவையான விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆனாலும் அந்த விளக்கங்கள் கவர்னருக்கு திருப்தி அளிக்கவில்லை. இதனால் கடந்த 6-ந்தேதி ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை கவர்னர் ஆர்.என்.ரவி தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பி விட்டார். இதற்கு தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வந்தனர். இதைத்தொடர்ந்து ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை மீண்டும் தமிழக சட்டசபையில் நிறைவேற்றி கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்ப தமிழக அமைச்சரவை முடிவு செய்தது. அதன்படி சட்டசபையில் நேற்று முன்தினம் கவர்னர் திருப்பி அனுப்பி இருந்த ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா அவை முன்பு வைக்கப்பட்டது.

இந்த தடை சட்ட மசோதாவை சட்டசபையில் மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனுமதி கோரினார். இதற்கு சபாநாயகர் அப்பாவு அனுமதி அளித்ததை தொடர்ந்து ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா உறுப்பினர்களின் பார்வைக்கு மீண்டும் வைக்கப்பட்டது. அரசியல் சட்டத்தின் 7-வது அட்டவணையில் உள்ள மாநில அதிகாரப்பட்டியலின் 34-வது பிரிவில் இது தொடர்பாக கூறப்பட்டுள்ள விதிகளை சுட்டிக்காட்டி சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு என்றும் அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

சுமார் 8 பக்கங்கள் கொண்ட இந்த சட்ட மசோதா முழு விவரங்களுடன் முழுமையாக தயாரிக்கப்பட்டு தமிழக அரசின் சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டது. சட்டத்துறையில் நேற்று முன்தினம் காலை இந்த மசோதாவின் அனைத்து பக்கங்களும் மீண்டும் சரிபார்க்கப்பட்டது. சட்ட விதிகள் அனைத்தும் முறையாக தெளிவுபடுத்தப் பட்டு இருந்ததால் சட்டத்துறையும் அன்றே கவர்னருக்கு அனுப்ப அனுமதித்தது.

இதைத்தொடர்ந்து சட்டத் துறை அதிகாரிகள் கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகைக்கு சென்று ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை அதிகாரிகளிடம் வழங்கி விட்டு வந்தனர். தமிழக சட்டசபையில் ஒரு சட்டம் 2-வது முறையாக நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டால் அதற்கு கவர்னர் ஒப்புதல் கொடுத்து தான் ஆக வேண்டும்.

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி டெல்லி சென்று மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவை சந்தித்து இதுதொடர்பாக கருத்துக்கள் கேட்டதாக தெரிகிறது. சட்ட நிபுணர்களிடமும் இது தொடர்பாக ஆலோசித்து உள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு கவர்னர் ஆர்.என். ரவி சென்னை திரும்பினார். நேற்று காலை அவரிடம் தமிழக சட்டசபையில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா ஆவணங்கள் கொடுக்கப்பட்டன.

இதையடுத்து அந்த ஆவணங்களை கவர்னர் ரவி ஆய்வு செய்தார். சட்ட நிபுணர்களிடம் அவற்றை வழங்கி கருத்துக்கள் கேட்டு உள்ளார். ஏற்கனவே கேட்கப்பட்ட விளக்கங்களுக்கு புதிய மசோதாவில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதா? என்றும் கேட்டறிந்தார். இவை அனைத்துக்கும் விடை காண இன்னும் சிறிதுநாட்கள் கால அவகாசம் தேவைப்படும் என்று கூறப்படுகிறது. எனவே மீண்டும் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதா குறித்து கவர்னர் ரவி முடிவு எடுக்க மேலும் சில நாட்கள் எடுத்துக் கொள்வார் என்று தெரியவந்துள்ளது. சட்ட நிபுணர்களுடன் கலந்து பேசிய பிறகு அவர் கையெழுத்து போடுவாரா? என்பதில் கேள்விக்குறி நிலவுகிறது. அவர் தமிழக அரசின் சட்ட மசோதாவை மத்திய அரசின் ஆய்வுக்காக மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளது.

மகளிர் ஐ.பி.எல். கிரிக்கெட்:

# ஹாட்ரிக் சாதனை படைத்த முதல் வீராங்கனை ‘வோங்’

மும்பை, மார்ச் 26-

மகளிர் பிரீமியர் தொடரில் முதல் ஹாட்ரிக் எடுத்து வரலாற்று சாதனை படைத்துள்ளார் மும்பை வீராங்கனை வோங்.

மகளிர் பிரீமியர் லீக் எலிமினேட்டர் போட்டியில் முதலில் பேட் செய்த மும்பை அணி 182 ரன்கள் குவித்தது. இதையடுத்து 183 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் யுபி வாரியர்ஸ் அணி களமிறங்கியது. 17.4 ஓவரில் 110 ரன்களுக்கு யுபி வாரியர்ஸ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் 72 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றதுடன், இறுதிப்போட்டியில் டெல்லி கேபிடல்ஸ் அணிக்கு எதிராக விளையாடவுள்ளது.

தொடக்கத்தில் மூன்று முக்கிய விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய போது அணியை சரிவிலிருந்து மீட்டார் கிரண் நவ்கிரே. ஒரு புறம் விக்கெட்டுகளை சரிந்தாலும் பவுண்டரி, சிக்ஸர் என அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த கிரண் நவ்கிரே 43 ரன் எடுத்த போது மும்பை வேகப்பந்து வீச்சாளர் வோங் அவரது விக்கெட்டை வீழ்த்தினார்.

அவரது விக்கெட்டோடு இல்லாமல் சிம்ரன் ஷேக், சோஃபி எக்லெஸ்டோன் ஆகியோரின் விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து வீழ்த்தி, மகளிர் ஐபிஎல் தொடரில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்த முதல் வீராங்கனை என்ற பெருமையை பெற்றார். வேகத்தால் மிரட்டிய இஸ்ஸி வோங் வெறும் 15 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பேட்டிங்கில் கலக்கிய நாட் ஸ்கிவர்-பிரண்ட், பந்துவீச்சிலும் ஒரு விக்கெட் வீழ்த்தி ஆட்டநாயகி விருதை தட்டி சென்றார். முதல் மகளிர் ஐபிஎல் தொடரின் இறுதிப்போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை டெல்லி கேபிட்டல்ஸ் - மும்பை இந்தியன்ஸ் இடையே பார்போர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.




● மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், மயிலாடுதுறையில் அமைக்கப்பட்டுள்ள முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், உச்சநீதிமன்ற நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், எம்.எம்.சுந்தரேஷ், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ராஜா, உயர்நீதிமன்ற நீதிபதி மகாதேவன், அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.




● மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டிடங்களுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு, உச்சநீதிமன்ற நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியன், எம்.எம்.சுந்தரேஷ், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ராஜா, உயர்நீதிமன்ற நீதிபதி மகாதேவன், அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.

# கொரோனா பரிசோதனையை...(1-ம் பக்க தொடர்ச்சி

மத்திய சுகாதாரத்துறை கடிதம் அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில், கொரோனா பரிசோதனையை அதிகப்படுத்த வேண்டும். கொரோனா பரவலை கட்டுப்படுத்த தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். மருத்துவ ஆக்சிஜன், உபகரணங்களை போதிய அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும். கூட்டம் அதிகம் உள்ள இடங்களுக்கு செல்வதை தவிர்த்தல், முக கவசம் அணிதல் உள்ளிட்ட கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும். இன்ஃபுளூயன்சா வைரஸ் பாதிப்பை கட்டுப்படுத்த தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இந்தியாவில் வெள்ளிக்கிழமைஒரே நாளில் 1,590 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இதன்மூலம், தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 8,601 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா தொற்று ஏற்பட்டு குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 கோடியே 41 லட்சத்து 62 ஆயிரத்து 832 ஆக உள்ளது. கொரோனா தொற்றால் மகாராஷ்டிராவில் 3 பேர், கர்நாடகா, ராஜஸ்தான், உத்தராகண்ட மாநிலங்களில் தலா ஒருவர் என மொத்தம் 6 பேர் உயிழந்துள்ளனர். இதன்படி, கரோனா தொற்றால் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 30 ஆயிரத்து 824 ஆக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



● சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறும் தொழில்நுட்பம், தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு உச்சி மாநாட்டின் நிறைவு நாள் விழாவில் தொழில்நுட்பம் சம்பந்தமான புத்தகத்தை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார். அருகில் அமைச்சர் த.மனோதங்கராஜ், சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா, கூடுதல் தலைமைச்செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா, துறைச்செயலாளர் ஜெ.குமரகுருபரன், மேலாண்மை இயக்குநர் ஜான்லூயிஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

## ராகுல் தகுதி நீக்கத்தால் காலியாக அறிவிக்கப்பட்ட

# வயநாடு தொகுதியில் விரைவில் இடைத்தேர்தல் நடத்த திட்டம்?

திருவனந்தபுரம்,மார்ச்26-

ராகுல்காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டதால் காலியான வயநாடு தொகுதியில் விரைவில் இடைத்தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையம் தீவிர ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

உத்தரபிரதேசத்தின் அமேதி தொகுதியில் போட்டியிட்டு வந்த ராகுல் காந்தி, கடந்த 2019-ம் ஆண்டு தேர்தலில் யாரும் எதிர்பாராதவிதமாக கேரளாவின் வயநாடு தொகுதியிலும் போட்டியிட போவதாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியானதும், வயநாடு தொகுதியின் மீது அனைவரின் பார்வையும் திரும்பியது. அங்கு போட்டியிட்ட ராகுல் காந்தி அமோக வெற்றி பெற்று எம்.பி. ஆனார். ஆனால் உத்தரபிரதேசத்தின் அமேதி தொகுதியில் அவர் தோல்வி அடைந்ததால் வயநாடு தொகுதி எம்.பி.யாக அவர் பதவி ஏற்றுக்கொண்டார்.

இந்த நிலையில்தான் 2019-ல் நடந்த தேர்தல் பிரசாரத்தின் போது பிரதமர் மோடியை மறைமுகமாக விமர்சித்து பேசினார். இதுபற்றி குஜராத் மாநிலம் சூரத் மாவட்ட கோர்ட்டில் பாரதிய ஜனதா எம்.எல்.ஏ.பூர்னேஷ்மோடி அவதூறு வழக்கு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த கோர்ட்டு நேற்று முன்தினம் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு ஜெயில் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய 30 நாட்கள் அவகாசமும் வழங்கியது.

ராகுல் காந்திக்கு 2 ஆண்டு ஜெயில் தண்டனை விதித்ததும் மக்கள் பிரதி நிதித்துவ சட்டம் 1951-ன் படி அவரது பதவியை பறிக்க பாராளுமன்ற செயலகம் நடவடிக்கை எடுத்தது. இதையடுத்து நேற்று பிற்பகல் ராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலகம் அறிவித்தது. ராகுல் காந்தியின் பதவி பறிபோனதால் அவரை எம்.பி.யாக தேர்வு செய்த வயநாடு தொகுதியும் காலியானது. இதுவும் பாராளுமன்ற செயலக அறிவிப்பில்குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டால் அடுத்த 6 மாதத்தில் அந்த தொகுதிக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன்படி இப்போது வயநாடு தொகுதிக்கும் உடனடியாக இடைத்தேர்தல் நடத்தப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

வயநாடு தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டால் அங்கு ராகுல் காந்தி போட்டியிட முடியுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது.

அதன்படி ராகுல் காந்தி 2 ஆண்டு தண்டனை பெற்றிருக்கிறார். அவர் போட்டியிட வேண்டும் என்றால் இந்த தண்டனையை மேல் கோர்ட்டு ரத்து செய்ய வேண்டும் அல்லது நிறுத்தி வைக்க வேண்டும். அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே ராகுல் காந்தி தேர்தலில் போட்டியிட முடியும்.

இப்போதைய சூழ்நிலையில் தேர்தல் ஆணையத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்ற எதிர்ப்பார்ப்பு அனைவரிடமும் ஏற்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் வயநாடு தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிப்பை வெளியிடுமா? அல்லது மேல் கோர்ட்டின் முடிவுக்கு காத்திருக்குமா? என்றும் கேள்வி எழுந்துள்ளது.

இதற்கு காரணம், கடந்த ஜனவரி மாதம் லட்சத்தீவு தொகுதியின் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் எம்.பி. முகமது பைசல் மீதான வழக்கில் கோர்ட்டு அவருக்கு 10 ஆண்டு ஜெயில் தண்டனை வழங்கியது. கோர்ட்டு உத்தரவு வெளியானதும் உடனடியாக பிப்ரவரி 27-ந்தேதி இடைத்தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது. இதற்கிடையே கேரள ஐகோர்ட்டில் முகமது பைசல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தொடர்ந்து முகமது பைசலின் தண்டனையை ஐகோர்ட் நிறுத்தி வைத்தது. இதையடுத்து அங்கு நடைபெற இருந்த இடைதேர்தலும் ரத்து செய்யப்பட்டது.

இதுபோல உத்தரபிரதேசத்தின் ராம்பூர் சட்டசபை தொகுதியின் எம்.எல்.ஏ. ஆசம்கானும் ஒரு வழக்கில் தண்டனை பெற்றார். உடனே அங்கும் இடைத்தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்தது. அதற்குள் ஆசம்கான் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்தார்.

மேல்முறையீட்டு மனுவின் முடிவு வரும்வரை அவரது தண்டனையை சுப்ரீம் கோர்ட்டு நிறுத்தி வைத்தது. இதையடுத்து அங்கும் அறிவிக்கப்பட்ட இடைத்தேர்தல் வாபஸ் பெறப்பட்டது. இப்படி பல முன்னுதாரணங்கள் இருப்பதால் ராகுல் காந்தி விவகாரத்திலும் தேர்தல் ஆணையம் காத்திருக்கத்தான் வாய்ப்பு உள்ளது என்று சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

இதுபோல பாராளுமன்ற செயலகம் வெளியிட்டுள்ள ராகுல் காந்தி தகுதி நீக்க அறிவிப்பில் பல சட்ட குறைபாடுகள் இருப்பதாகவும் சட்டநிபுணர்கள் தெரிவித்து உள்ளனர். மேல் கோர்ட்டின் முடிவை தெரிந்து கொண்ட பின்னர் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிடுவதே சரியாக இருக்கும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.



● செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், காஞ்சிபுரம் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் புக்கத்துறை, உத்திரமேரூர் சாலை, முதலமைச்சர் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2021-2022-ம ஆண்டு ரூ.54 கோடி மதிப்பில் 7 கி.மீ. இருவழிச்சாலையிலிருந்து 4 வழிச்சாலையாக தரம் உயர்த்தப்படுவதறக்ன பணிகள் நடைபெற்று வருவதை நேற்று அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட கலெக்டர் ராகுல்நாத் உள்ளார்.



● சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில் நேற்று, அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில், சட்டமன்ற கூட்டத்தொடர் அறிவிப்புகள் 2021-2022 மற்றும் 2022-2023 தற்போதைய நிலை குறித்தும், 2023-2024-ம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் தொடர்பாகவும், 3-வது முழுமை திட்டம், தொலைநோக்கு நில சேர்மம், தள பரப்புக்குறியீடு, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம், நீதிமன்ற வழக்குகள் நிலவரம், வரன்முறை திட்டம் மற்றும் கோயம்பேடு மொத்த விற்பனை வளாகம் தொடர்பான கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற்றது.

## கர்நாடக சட்டசபை தேர்தல்:

# காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் 124 பேரின் பட்டியல் வெளியீடு

பெங்களூரு,மார்ச்26-

கர்நாடக சட்டசபை தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. முன்னாள் முதல்வர் சித்தராமையா வருணா தொகுதியில் போட்டியிடுகிறார்.

கர்நாடக சட்டப்பேரவையின் பதவிக்காலம் வருகிற மே 24ந்தேதி முடிவடைகிறது. இதையடுத்து கர்நாடக சட்டசபைக்கு தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் தேதி ஓரிரு நாளில் அறிவிக்கபபட உள்ள நிலையில் ஆளும் பா.ஜனதா, காங்கிரஸ், ஜனதா தளம் (எஸ்) கட்சிகள் தேர்தலுக்கு தீவிரமாக தயாராகி வருகின்றன. அரசியல் கட்சி தலைவர்கள் கர்நாடகத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பா.ஜ.க. சார்பில் பிரதமர் மோடி, மத்திய மந்திரி அமித்ஷா, கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா மற்றும் மத்திய மந்திரிகளும், காங்கிரஸ் கட்சி சார்பில் அக்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, மாநில தலைவர் டி.கே.சிவக்குமார், முன்னாள் முதல் மந்திரி சித்தராமையா ஆகியோரும் பாதயாத்திரை, பொதுக்கூட்டங்களில் பங்கேற்று மக்கள் ஆதரவை திரட்டி வருகிறார்கள்.

அதுபோல் ஆம் ஆத்மி கட்சி சார்பில், அக்கட்சி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்ட நிர்வாகிகளும், ஜனதாதளம் (எஸ்) கட்சி சார்பில் அக்கட்சியின் தேசிய தலைவர் தேவேகவுடா, மாநில மூத்த தலைவர் குமாரசாமி உள்ளிட்டோரும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். 3 கட்சிகளும் யாத்திரை பெயரில் பொதுக்கூட்டங்களை நடத்துகின்றன. ஜனதா தளம் (எஸ்) கட்சி 93 தொகுதிகளுக்கு முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை ஏற்கனவே அறிவித்துவிட்டது.

கர்நாடக மாநில காங்கிரஸ் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்வு செய்வதற்காக கட்சி மேலிடம் அமைத்துள்ள தேர்வு குழு ஆலோசனை கூட்டம் பெங்களூருவில் 9 கட்டங்களாக நடந்தது. இதில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பாக மாவட்ட கட்சி நிர்வாகிகள், கட்சியின் மூத்த தலைவர்கள் சிபாரிசு செய்திருந்த பெயர்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மாநிலத்தில் மொத்தமுள்ள 224 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டு, அதை கட்சி மேலிட வேட்பாளர் தேர்வு குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதை தொடர்ந்து கர்நாடக சட்டமன்ற தேர்தலுக்கான முதல் கட்ட வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டது.

இதில் 124 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியாகியிருக்கிறது. முன்னாள் முதல்வர் சித்தராமையா வருணா தொகுதியிலும் கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர் டி.கே. சிவக்குமார் கனகபுரா தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். தேவனஹள்ளியில் முனியப்பா, பெங்களூரு ராஜாஜிநகரில் புட்டண்ணா, ஆர்.ஆர். நகர் குசுமா, பெல்காம் ஊரகத் தொகுதியில் லட்சுமி ஹெப்பால்கர், தாவாங்கேரே தெற்குத் தொகுதியில் சாமனூர் சிவசங்கரப்பா, எம். பி பாட்டீலுக்கு பாபலேஷ்வர் சீட்டு வழங்கப்பட்டு உள்ளது.



● செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக படகு குழாம் வளாகத்தில் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான 2 அடுக்கு மிதக்கும் உணவக கப்பல் கட்டுமான பணியினை, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் முதன்மைச்செயலாளர் பி.சந்திரமோகன், சுற்றுலா இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட கலெக்டர் ராகுல்நாத் ஆகியோர் உள்ளனர்.